பல்சுவை

தமிழ்நெஞ்சம்

www.tamilnenjam.com

செப்டம்பர் 2017

ஹேமா பிரகாஷ்

BIGG BOSS

இரு கோப்பை தேநீரும்,
இதயங்களின் காதலும்...!

கும்பகோணம். நௌஷாத் கான். லி

நன்மக்கள் உள்ளமெலாம் நல்லொளியால் நிரம்பட்டும்,
நன்னெறிபால் எல்லோரும் ஒருங்கிணைந்து திரும்பட்டும்!

பல்சுவை

தமிழ்நெஞ்சம்

தோற்றம் 1972

செப்டம்பர் 2017

ஆசிரியர் / வெளியிடுபவர் :
அமின் மொஹமெட்

இணையாசிரியர் :
சஃபி மொஹமெட்

ஆசிரியர் குழு :
ஹிப்ஸுர் ரஹ்மான்
“காகிதம்” மனோபாரதி
சத்தியபாமா சந்திரன்
அழகுநிலா
சு.பீர்முகமது
ஓவியக்கவிஞர் உமாபதி
“நம் குடும்பம்” ஆ. வர்க்கீஸ்
நெல்லை உலகம்மாள்
வசந்தி ஆதித்தன்
கவிஞர் அ.முத்துசாமி
கவிஞர் ஈழபாரதி
கவிதாயினி செந்தாமரைக்கொடி
கவிஞர் கலந்தர் பூமதீன்
கவிஞர் பாலமுனை பாறூக்

ஆலோசகர்கள் :
“பைந்தமிழரசு” பாவலர் மா. வரதராசன்
கவிதாயினி சக்தி ஜோதி
கவிதாயினி அமுதா பொற்கொடி

புதிய ஆக்கங்களும், விமர்சனங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன. நூல் விமர்சனத்துக்கு, நூலின் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும்.

படைப்புகளுக்கு படைப்பாளிகளே பொறுப்பு. செவ்வைப் படுத்த ஆசிரியர் குழுவுக்கு உரிமையுண்டு.

எழுத்தாளர்கள், நன்கொடையாளர்கள், புரவலர்கள் மற்றும் விமர்சனம், அறிமுகத்திற்கு நூல்கள் அனுப்ப அஞ்சல் தொடர்புகளுக்கு ...

TAMILNENJAM
59, rue des Entrechats
95800 Cergy - France

web : tamilnenjam.com
email : editor@tamilnenjam.com

புதிய வெளியீடு...

தமிழ்த்தேனே

மலைத்தேனே! செந்தமிழே உன்நி லைக்கே
மலைத்தேனே! அன்றிந்தத் தமிழ கத்தில்
கலைத்தேனே ஓடமகிழ்ந் தாயே! சில்லோர்
கலைத்தேனே எனவேறு மொழிக லக்க
விலைத்தேனே ஆனாயே! விழித்தே னேநான்.
விரைந்தேனே உனையுநறுந் தேனே யாக்கக்
குலைத்தேனே உனையழிக்குந் திட்டம். : நல்ல
குலைத்தேனே! எழுந்தேனே உனைவ ளர்க்க!

அலைந்தேனே செந்தேனே! உனையு யர்த்த
அழுதேனே துடித்தேனே உன்நி லைக்கே
உலைந்தேனே உனைத்தின்று வாழுங் கூட்டம்
உவகைத்தே னேயுண்ணக் கண்டே நானும்
குலைந்தேனே! தமிழகத்தில் உலகோர் போற்றும்
கொள்கைத்தே னேயில்லார் ஏட்டில் பாட்டில்
கலைந்தேனே எனநீயும் வருந்தல் கண்டே
கனன்றேனே! எடுத்தேனே அறிவு வாளை!

இருந்தேனே! உனையுலகம் விரும்பச் செய்ய
இருந்தேனே! தமிழர்களின் மடநோய் நீக்க
வருந்தேனே! உனையிகழ்வார் தமைய ழிக்க
வருந்தேனே! இடர்நீக்கி உனைக்கா வாமல்
அருந்தேனே நல்லுணவே! கிடைத்தற் கிங்கே
அருந்தேனே! உண்ணவுண்ண நற்சு வையைத்
தருந்தேனே! நல்லுடலை உயிரைக் காக்கும்
தமிழ்த்தேனே! உன்னிடத்தென் உயிர்வைத் தேனே!

புலவர் புங்கனேரியார்

எலிப்பொறி

பட்டுக்கோட்டை ராஜா

இந்திரன் அலுவலகப் பணிகள் செவ்வனே நடக்கவேண்டுமென விரும்புகிற மனிதர். வாங்குகிற ஊதியத்துக்கு நிறைவாகப் பணிபுரிய வேண்டுமென்பார். அப்படிப் பணியாற்றாதவர்களை அவர் தண்டிக்கத் தயங்குவதுமில்லை. அதனாலேயே அவரிடம் ஊழியர்களுக்கு மரியாதை கலந்த பயமுண்டு. மேல் அதிகாரிகளுக்கு அவர்மீது தனிப்பட்ட மதிப்பும் உண்டு.

அவரது அறைக்கதவில் மெல்லிய விரல்களால் தட்டும் சத்தம் கேட்டது. அதைத் தொடர்ந்து, "உள்ளே வரலாமா சார்?" என்று ஆங்கிலத்தில் கேட்டது ஒரு பெண்குரல்.

அந்தக் குரலுக்குச் சொந்தக்காரி மதுரா என்பதை உடனே அனுமானித்த இந்திரன், "யெஸ்" என்றார்.

இந்த அலுவலகத்துக்கு இந்திரன் மாற்றலாகிவந்து முடிந்திருக்கும் இரண்டு மாதங்களில் மதுராவின் மீது நல்ல அபிப்பிராயம் ஏற்பட்டிருந்தது. கொடுத்த வேலையை உரிய நேரத்தில் தவறின்றிச் செய்து முடிக்கிறவள். மற்றவர்களிடம் தேவையில்லாமல் கதையளக்காதவள். இளமையும், அழகும் இருந்தாலும் துளியும் கர்வமில்லாதவள்.

அவள் உள்ளே வந்ததும் மல்லிகைவாசம் கும்மென்று அறையை நிறைத்துக் கொண்டது. இவர் நிமிர்ந்தார்.அவள் தலையில் மல்லிகைப் பந்து. கொண்டுவந்த கோப்பை இவர் முன்னால் வைத்தவள்,``சார், நம்ம விருகம்பாக்கம் பிராஞ்ச் பில்டிங்கோட ரெண்ட் நாலு மாதமா கொடுக்கப் படாமல் இருந்துச்சி சார்... லேண்ட்லார்டு வெளிநாடு போயிருந்தாராம்... இப்ப திரும்பி வந்திட்டாராம்..மெயில் அனுப்பியிருந்தார்... அதான் சார் 'ரீட்ரா' பண்ணி எடுத்திட்டு வந்தேன்."

"வெல்டன் மதுரா, இப்பதான் அவர் எனக்கு ஃபோன் பண்ணினார்.. நீங்க வேலையைச் செய்து முடிச்சிட்டீங்க... வெரிகுட்..ஆனா இது உங்க பிராஞ்ச் இல்லையே?"

"ஆமா சார்... நிவேதா பிராஞ்ச்... இன்னிக்கு அவங்க லீவுங்கிறதால நான் அட்டெண்ட்

பண்ணினேன்..”

“வெரிகுட்...உங்களை நான் பாராட்டுறேன்... தங்களுக்கு அலாட் பண்ணின வேலையையே இங்கே சிலர் பார்க்கிறதில்லை...”

“நான் அப்படி கிடையாது சார்!”

“எனக்குத் தெரியும் மதுரா.. அதனால்தான் நான் பாராட்டினேன்..”

“தேங்க்ஸ் சார்” என்றாள்.

இந்திரன் கையெழுத்து போட்டுக் கோப்பை அவளிடம் நீட்டினார்.

வாங்கிக் கொண்டவள், “சார், ஒன்மோர் ரிக்வெஸ்ட் சார்”

“சொல்லுங்க மதுரா”

“என்னோட ‘மௌஸ்’ ஒழுங்கா ஒர்க் பண்ண மாட்டேங்குது சார்.. அதை மாற்றித் தரணும்!”

இந்திரன் சிரித்தார் “உங்க மௌஸா?... உங்க ஸிஸ்டத்துல கனெக்ட் ஆகியிருக்கிற மௌஸா?”

மதுராவும் சிரித்தாள். வசீகரிக்கும் சிரிப்பு “ஸாரி சார், ஸிஸ்டம் மௌஸ்தான்!”

“இப்பவே மாற்றச்சொல்றேன், போங்க!”

இவரது முகத்தைப் பார்க்காமலேயே, “தேங்க்ஸ் சார்!” என்ற மதுரா அறைக்கதவைத் திறந்தபோது அந்த விபரீதம் நடந்தது!

அறை மூலையில் சுற்றிக் கொண்டிருந்த பெடஸ்டல் ஃபேனில் அவள் அணிந்திருந்த சுடிதாரின் துப்பட்டாமுனை சிக்கிக் கொண்டது. ‘படபட’ வெனச் சத்தமிட்டது.

பயத்தில் மதுரா அலறினாள். அவளின் திரண்டமார்புகள் மேகம் நீங்கிய மலைகளாய்க் காட்சிக்கு வந்தன. இந்திரன் செய்வதறியாமல் திகைத்துப் போனார்.

சில வினாடிகள்தான். வேகமாய் எழுந்தவர் அவளுக்குப் பின்னால் இருந்த ஃபேன் ஸ்விட்சை அணைத்தார். “ஒண்ணுமில்ல மதுரா, பயப்படாதீங்க!” என்று அவளருகில் சென்றார். மின்விசிறியின் ஒட்டம் நின்றதும், அதன் இறக்கைகளைப் பொறுமையாய் ரிவர்ஸில் சுழற்றி அதில் சிக்கியிருந்த துப்பட்டா முனையைக் கிழிந்துவிடாமல் மெல்ல விடுவித்தார்.

முழுதாய்த் துப்பட்டா விடுபட்டதும் மூடிக் கொண்ட மதுரா, வெட்கப் புன்னகையோடு வெளியேறினாள். அவள் போனபிறகும் மல்லிகைவாசம் அறைக்குள் உலவி இந்திரனைக் கிறங்கச் செய்தது.

உடனே மனைவி தாமரை நினைவில் வந்தாள் “துப்பட்டாவையா எடுத்து விடறீங்க... வீட்டுக்கு வாங்க கவனிச்சுக்கிறேன்!” என்றாள்.

∴ ∴ ∴

ஒருவாரம் கடந்தது.

அன்றுமாலை இந்திரன் அலுவலகத்தில் இருந்தபோது, மண்டல அலுவலகத்திலிருந்து மேலதிகாரியின் அந்தரங்க உதவியாளர் கண்ணன் தொலைபேசியில் அழைத்தார்.

“சொல்லுங்க கண்ணன்’’ என்றார் இந்திரன் மகிழ்வோடு. பதவி உயர்வை எதிர்பார்த்திருந்ததால், அது தொடர்பான செய்தி எதுவும் அவர் சொல்லுவார் என நினைத்தார்.

“சார், உங்களை ரீஜனல்மேனேஜர் நேர்ல பார்க்கணும்னு வரச் சொன்னாரு சார்... நாளைக்கே நீங்க வரணுமாம்!”

“ஓகே, கண்ணன்...” என்றிவர் அடுத்த வார்த்தை பேசுவதற்குள் இணைப்பு துண்டிக்கப்பட்டது. அவர் ஏன் இப்படி நடந்து கொள்கிறார் என்பது இந்திரனுக்குப் புரியவில்லை!

இந்திரன் காரணம் புரியாமலேயே

இன்பச்சுவை

விசாலமான வானத்துக் கதவுகள்...
நீரில் ஊன்றி கால் வைக்கும்.
பறவைகளுக்கு திறப்பதில்லை!

பெண் நிலவின் கோப்பையில்
மதுரசம் அருந்த துடிக்கும்
ஆண் சிங்கத்தின் மூச்சுகள்,
அறிவை முழுங்கி ,
அவள் வலியை மறந்து,
வெறும் உடலை மட்டுமே,
அருந்துகின்றன!

வாழ்வு எதுவென்று தெரியா
மனிதன், நின்று நிதானித்து
அதன் அழகில் நிம்மதியாய்
இன்பமுற்று வாழ்வை சுவைப்பதில்லை.

ஹைருன்ரஹ்மான்

சென்னைக்குப் புறப்பட்டு வந்துவிட்டார். முந்தின இரவில் கண்ணனிடம் பேசமுயன்ற இவரது முயற்சிகள் அனைத்தும் தோல்வியில் முடிந்தன. அவரது அலைபேசி அணைத்து வைக்கப் பட்டிருந்தது.

'பதவி உயர்வு ஆணையை நேரில் தரப் போகிறார்களோ?' என்கிற நப்பாசையும் இவர் மனசின் ஒரு மூலையில் பிறாண்டிக் கொண்டே இருந்தது.

விடுதியில் அறையெடுத்து காலைக் கடன்களை முடித்த இந்திரன், மணி பத்தாகக் காத்திருந்து அண்ணா சாலையிலிருந்த மண்டல அலுவலகத்துக்கு ஆட்டோவில் கிளம்பினார்.

அலுவலகத்தில் ரீஜனல்மேனேஜர் முன்னமே வந்து இவரை எதிர்பார்த்துக் காத்திருப்பதாகச் சொன்னார்கள். உடனே அவரது அறைக்கு விரைந்தார்.

"வாங்க, இந்திரன்... உட்காருங்க" என்ற ரீஜனல்மேனேஜரின் வார்த்தைகளில் கடுமை இருந்தது. அவர், தானே எழுந்து அறைக் கதவைத் தாழிட்டதும் இவருக்கு ஆச்சர்யமாய் இருந்தது.

''இந்திரன், உங்களை எதுக்காக வரச் சொன்னேன்னு தெரியுதா?"

"இல்லை சார், தெரியலை!"

"உங்க மேல ஒரு கம்ப்ளெயிண்ட் வந்திருக்கு இந்திரன்... செக்ஸ்வல் ஹராஸ்மெண்ட் கேஸ்.. உங்க கூட வேலை செய்ற ஒரு பொண்ணு மெயில் அனுப்பியிருக்கா... உங்க கேரியரே டோட்டலா ஸ்பாயில் ஆய்டுச்சி... ப்ரமோஷன் வர்ற நேரத்துல நீங்க இப்படி நடந்துப்பீங்கன்னு நான் கனவிலும் நெனைக்கலை!"

இந்திரன் அதிர்ந்து போனார்``சார், நீங்க சொல்றது எனக்குப் புரியலை!"

"ஓகே, இந்த மெயிலைப் பாருங்க..." என்ற ஆரெம் தனது லேப்டாப்பை இவர் பக்கமாய்த் திருப்பி ஒரு மெயிலைத் திறந்து ஓடவிட்டார்.

அதில் மதுராவின் துப்பட்டாவை இந்திரன் பிடித்து இழுப்பது போலவும், முகத்தில் பல்வேறு உணர்ச்சிகளைக் காட்டும் அவள் அலறியடித்து அறைக்கதவைத் திறந்துகொண்டு ஓடுவது போலவும் காட்சிகள் பதிவாகி இருந்தன.மறுபடியும் அதேகாட்சி வெவ்வேறு விதமாய்க் காட்டப்பட்டது!

அதைப்பார்த்த இந்திரன் மிரண்டு விட்டார்!

“என்ன இந்திரன், அதிலிருக்கிறது நீங்கதானே?...அந்தப் பொண்ணு உங்க ஸ்டா ஃப்தானே?”

“அது நான்தான் சார், ஆனா கிரா ஃபிக்ஸுல உண்மையில் நடந்ததை மாற்றிக் காட்டியிருக்காங்க...எனக்கே தெரியாம என் அறையில் ஸெல்ஃபோனை மறைச்சி வச்சி இதை எடுத்திருக்காங்க...அப்புறமா கிரா ஃபிக்ஸ் பண்ணி மாற்றியிருக்காங்க!”

“என்ன சொல்றீங்க இந்திரன்?”

“ஆமா சார், அன்னிக்கு இந்தப் பொண்ணு என் அறைக்குள்ளே வந்திட்டு வெளியே போகும்போது அவளோட துப்பட்டா அங்கே இருந்த பெடஸ்டல்ஃபேன்ல சிக்கிடுச்சி... அது யதார்த்தம்னு நெனச்சேன்.. ஃபேனை நிறுத்திட்டு, சிக்கியிருந்த அவளோட துப்பட்டாவை நானே எடுத்துவிட்டேன்... அவள் மானம் காக்க நான் செய்த உதவியை வச்சே என் மானத்தை வாங்கத் திட்டம் போட்டிருக்காங்கன்னு இப்ப புரியுது!”

“அந்த மதுரா ரொம்ப நல்ல பொண்ணுன்னு நீங்களே என்கிட்ட சொல்லி இருக்கீங்களே?”

“நல்ல வொர்க்கர்...ஆனா விஷம்னு இப்பதான் புரியுது.... அவள் நடிப்புல நானும் ஏமாந்திட்டேன் சார்!”

“அவள் எதுக்காக தன் மானத்தையே பணயம் வச்சி உங்களைச் சிக்க வைக்கணும்?”

“அதுக்கான காரணமும் இப்பதான் சார் எனக்குப் புரியுது... பத்து நாளைக்கு முன்னாடி

உள்ளதைக் காட்டும்
உண்மை நண்பன்
கண்ணாடி.

கவிஞர் பாலக்கிருட்டிணன்

பணத்தைக் கையாடிட்டான்னு சதீஷ்னு ஒருத்தனை நான் சஸ்பெண்ட் பண்ணினேன் இல்லையா, அவன் இவளோட காதலன்... ஆனா மதுரா அப்பவே அவனைக் கை கழுவிட்டதா என்கிட்ட சொன்னா... அவ சும்மா நடிச்சிருக்கான்னு இப்பதான் எனக்குப் புரியுது...ரெண்டுபேருமா சேர்ந்து என்னைப் பழிவாங்கிட்டாங்க!”

‘‘ஓகே இந்திரன், உங்களை நான் நம்பறேன்... ஆனா இந்த உலகம் நம்பணும்... நம்ம நிர்வாகம் நம்பணுமே.. இப்ப நான் என்ன செய்யட்டும்?”

“என்னால உங்களுக்கு எந்தச் சிரமமும் வேண்டாம் சார்.. முறைப்படி என்ன செய்யணுமோ அதை நீங்க தாராளமாச் செய்யலாம்.. அதை நான் ஏத்துக்கிறேன்.. ஆனா நான் தப்பு செய்யலைங்கிறதைச் சீக்கிரமே நிர்வாகத்துக்குப் புரியவைப்பேன்!” என்றார் இந்திரன் தெளிவான குரலில்.

“நன்றி இந்திரன்... உங்களை நான் பத்து நாளைக்கு சஸ்பெண்ட் பண்றேன்... உங்களை நீங்க ப்ரூவ் பண்ண இந்த அவகாசம் போதும்னு நினைக்கிறேன்... இந்தாங்க ஆர்டர், என்னைத் தப்பா நினைக்காதீங்க!”

இந்திரன் எழுந்துநின்று அந்த ஆர்டரை வாங்கிக் கொண்டார்``என்னை கௌரவமா நடத்தினதுக்கு நன்றி சார்... என்மேல் நீங்க வச்சிருக்கிற நம்பிக்கையை நிச்சயமா நான் காப்பாற்றுவேன்...வரேன் சார்” என்ற இந்திரன் அறையைவிட்டு வெளியேறி நடந்தார். முதுகில் பதிந்த ஏளன விழிகளைத் திரும்பிப் பார்க்காமல் நடந்தார்.

இது ஸி.ஜியின் சாகசம் என்பதை நிரூபித்துவிடலாம். மதுராவின் எதிர்காலத்தை எண்ணி அவர் மனம் வருத்தப்பட்டது! ■

மண்ணும் மொழியினம் மாற்றான் கையில்
இன்னும் என்னடா இமைக்குள் உறக்கம்?

எழுந்து வாடா எரிதழல் போல
பழுதை எல்லாம் பட்டென எரித்திடு!

ஆண்ட இனமே அடிமை வாழ்வா?
மாண்டது போதும் மற்போர் செய்திடு!

அடிமை வாழ்வை அடித்து விரட்டு
விடிவு பிறந்திட விழியைத் திறந்திடு

மான மறவா! மண்ணை மீட்டிடு
வானம் கூட வந்து வாழ்த்திடும்

தமிழ்நிலம் எங்கும் தர்ப்பை புல்லே
அமிழ்த தமிழை அயலான் அழித்தான்

உன்மொழி பேசிட உனக்குரிமை இல்லை
நன்மொழி மறந்து நஞ்சாய் பேசினை

உலகில் உன்போல் உள்ளவர் இல்லை
நிலத்தை இழந்து நடுத்தெரு வந்தாய்

ஆதி குடிநீ ஆண்ட மறவா!
ஏதிலி போல எங்கும் திரிகிறாய்

வேண்டாம் இழிவு விலங்கை உடைத்திடு
பூண்டோம் போர்க்களம் புலியென புறப்படு

பகைகள் எல்லாம் பரிதிமுன் காரிருள்
தொகையாய் சேர்த்திடு தொல்லைகள் விலகும்

அரிமா தமிழா! அடங்கல் முறையா?
நரிமா ஆள நடுங்கிக் கிடப்பதா?

கரிமா எனவே காட்டு உன்திறன்
பரிமா போல பாய்ந்து குதித்திடு

உன்மொழி தமிழ்மொழி உன் இனம் தமிழினம்
உன்நிலம் தமிழ்நிலம் உணர்ந்திடு நன்றே

மொழியினம் நாட்டை மீட்க
விழித்தெழு இன்றே வீறுடன் மறவா!

புதுவைத் தமிழ்நெஞ்சன்

குர்பானி

ஜி. ஆசிப் அலி, துபாய்

மக்ரிப் தொழுகை முடிந்து பள்ளிவாசலிலிருந்து மக்கள் வெளியேறத் தொடங்கினர்.

கையூம் துஆ கேட்டுவிட்டு எழுந்தான்.

பள்ளிவாசலின் படிகட்டுகளிலிருந்து இறங்கி நேரே காஜா பாய் டீக்கடையை நோக்கி நடந்தான். மக்ரிப் தொழுகை முடிந்ததும் தேநீர் அருந்துவது அவன் வழக்கம். அதுமட்டுமில்லை. காஜா பாய் போடும் டீக்கு ஒரு தனி ருசி இருந்தது. அதற்காகவே பக்கத்து மொஹல்லாவிலிருந்தும் ஆட்கள் அவர் கடையைத் தேடி வந்து தேநீர் அருந்திவிட்டுச் செல்வர்.

வழக்கம்போல் டீக்கடையில் செமக் கூட்டம்.

கையூம் டீ கிளாசுடன் வந்து வெளியே போடப்பட்டிருந்த பெஞ்சில் அமர்ந்துக் கொண்டான். அவனுக்குச் சற்றுத்தள்ளி இருவர் அமர்ந்து தேநீர் பருகிக்கொண்டே உரையாடிக்கொண்டிருந்தனர்.

“இன்னக்கு நீ என்ன குர்பானி கொடுத்தே?”

“மாடுதான். நீ?”

“என்னால் ஆடுதான் கொடுக்க முடிஞ்சது.”

“பரவாயில்லையே, நேத்து உன்னால வெறும் கோழிதானே கொடுக்கமுடிஞ்சது?”

“நானும் எப்படியாவது ஒட்டகம் கொடுக்கலாம்னு முயற்சிக்கறேன். முடிய மாட்டேங்குதே.”

கையூமுக்குப் புரை ஏறியது.

‘இவர்கள் என்ன பேசிக்கொள்கிறார்கள்? தியாகத்திருநாள் முடிந்து ஒரு வாரம் ஓடிவிட்டது. குர்பானி கொடுப்பதாய் இருந்தால் பெருநாளில் இருந்து மூன்று நாட்களுக்குள் கொடுத்தாக வேண்டும். அப்படியிருக்க, வேளா கெட்ட வேளையில் இது என்ன குர்பானி? அதுவும் தினம் கொடுக்கறதாக வேறு சொல்லிக்கொள்கிறார்கள். ஆடு, மாடு, கோழி, ஒட்டகம்னு ஒரே குழப்பமாக இருக்கிறதே..?’

கையூம் குழப்பத்தின் உச்சிக்கே போனான்.

தேநீர் அருந்திவிட்டு அவர்கள் விடைப்

ஈச்சமரத்தில்
ஊஞ்சலாடும்
தூக்கணாங்குருவிக்கூடு

உலை கொதிக்கும்
ஓசை கேட்கும்
ஊதாங்குழல்

மனப்பாடத்தில்
மறந்தே போனது
வாழ்க்கைப்பாடம்

விதைநெல்
பதுக்கி வைக்கும்
வயல் எலிகள்

மல்லிகைப் பந்தலுக்குள்
நுழைந்து போகறாள்
கைம்பெண்

புதுவை குமாரி

பெற்றனர்.

அவர்களில் ஒருவர் கையூம் போக வேண்டிய வழியில் நடந்ததால் அவரைப் பின்தொடர்ந்தான்.

அவர்கள் பேசிக்கொண்டதைப் பற்றித் தெரிந்துக்கொள்ளவில்லையென்றால் மண்டையே காய்ந்துவிடும்போல் இருந்தது கையூமுக்கு.

"பாய்... ஒரு நிமிஷம்..." என்றான்.

அவர் நின்று திரும்பினார்.

'என்ன?' என்பதைப்போல் ஏறிட்டார்.

"கொஞ்ச நேரத்துக்கு முந்தி நீங்க டீக்கடையில பேசிக்கிட்டதை நானும் கேட்டேன்.

ஹஜ்ஜூப் பெருநாள் முடிந்து ஒரு வாரம் ஆகிவிட்டது. நீங்க இப்பவும் குர்பானி பத்தி பேசிக்கிறீங்க..?"

கையூம் கேட்டதும் 'கட,கட'வென சிரித்தார் அவர்.

"ஓ...அதுவா..? அதாவது தொழுகையில் யார் இமாமுக்குப் பின்னால் முதல் வரிசையில் நிற்கிறார்களோ அவர்கள் ஒரு ஒட்டகத்தை குர்பானி கொடுத்த ஸவாபைப் பெறுகிறார்கள். இரண்டாவது வரிசையில் இடம் பெறுபவர்களுக்கு ஒரு மாட்டை குர்பானி கொடுத்த ஸவாபும், மூன்றாம் வரிசைக்காரர்களுக்கு ஒரு ஆடும், நான்காம் வரிசையில் இடம் பிடித்தவர்களுக்கு ஒரு கோழியும் குர்பானி கொடுத்த ஸவாப் கிடைக்கிறது. நானும், என் நண்பனும் ஒவ்வொரு தொழுகை முடிந்ததும் இப்படித்தான் வந்து டிஸ்கஸ் பண்ணிப்போம் யார், யார் என்ன குர்பானி கொடுத்தோம் என்று."

அவர் விளக்கியதும், 'தொழுகை வரிசையில் இடம் பிடிப்பதில்கூட இவ்வளவு நன்மைகள் அடங்கியிருக்கின்றனவா?' என ஆச்சரியப்பட்டுப் போனான் கையூம்.

"உங்கள் விளக்கத்திற்கு ரொம்ப நன்றிங்க." என்றவாறு வீட்டை நோக்கி நடந்தான்.

கையூம், இனிதானும் எல்லா தொழுகைகளிலும் ஒட்டகத்தை குர்பானி கொடுக்கும் உறுதியான தீர்மானத்துடன்.

■

முகத்தொகை

(தரவு கொச்சகக் கலிப்பா)

கவிஞர். கு. நா. கவின்முருகு

புலர்பொழுது சூரியனை புள்ளினங்கள எழுப்பிவிட
மலர்முகைகள் மடல்திறந்து மணம்வீசி மகிழ்ந்தாட
செம்முளரி முருக்கவிழ்க்கும ஞாயிற்றின் வருகையிலே
அம்மானை யாடிடவே அழகவளும வந்தாளே.

நற்றமிழின சொல்லோச்ச நனிந்துவரும் நங்கையவள்
பொற்புடைய குணவதியாள் பொறுமைக்கு பெருமையவள்
நற்குலத்து உதித்துவந்த நாணிலத்தின் சிறப்பவளே
வற்றாத அன்புடைத்த ஆரணங்கு அவளன்றோ.

தமிழ்பூத்த நல்லுலகில தங்கத்தின பொலிவெனவே
அமிழ்தூறும் சொல்லாடி அரவணைக்கும் நறுமணமே
கமழ்கின்ற பூவையவள் காதலிலே நிறைக்கின்றாள்
இமகரனி ளெம்பேனோ இமையாகி குளிர்ந்தாளே.

கண்மணியாள் கவர்ந்திழுக்க காந்தளிதழ் விரலொக்க
விண்மீனாம் கருவிழிகள் விளையாடக் கண்டிடவே
பொன்மணியாள் மலர்க்கூந்தல் மகிழாதோ மணம்வீசி
வண்டாடும் குழலியவள் குழையாட ஆடினளே.

முன்பனியின் துளிதாங்கி முத்தாக ஒளிர்ந்திடுமே
மென்னிதழின் வண்ணத்தில் செங்கதிரோன் நாணிடவே
கன்னிமகள் கனவுகளில் மருதாணி சிவப்பழகாய்
உன்னழகில் நற்காலை காண்டிடவே வருவாயே.

வாழ்க்கை அமைவதெல்லாம் பாசம்குமெவனாக சூத்தியா

கலாச்சாரம் ஓர் இனத்தின் அடையாளம். நாட்டின் அறநெறி. சமுதாயத்தின் நாகரிக வளர்ச்சி. உண்மையில் பண்பாடு நம்முடைய பாரத தேசத்தின் ஒழுக்காறு. இந்தியாவை அடிமைபடுத்த முடியாது என்று நினைத்திருந்த ஆங்கிலேயர்க்கு மெக்காலே ஓர் ஆலோசனை தந்தான். “இந்தியாவில் பண்பாடும் கலாச்சாரமும் ஆன்மீகமும் செழுமை பெற்றிருக்கும் வரை இந்தியாவை நம்மால் கைப்பற்ற முடியாது. இந்தியர்களின் கலாச்சாரத்திலும் ஆன்மீகத்திலும் நம் பண்பாட்டை நுழைத்தால் இந்தியா அடிமைப்படும் என்பது சாத்தியம்” என்று மெக்காலே ஆங்கிலேயர்க்குச் செவியறிவுறுத்தினான்.

நம் நாட்டுப் பண்பாடு மிகச் சிறந்த பண்பாடு என்பதை அதன் மூலம் அறிந்து போற்றலாம். வெளிநாட்டு வாழ் மக்கள் இந்தியாவின் பழக்க வழக்கத்தையும் ஆன்மீகத்தையும் விருப்பப்பட்டு ஏற்றுக் கொள்ளும் மோகம் தொடங்கி இருக்கிறது என்றால் அது இந்தியர்களுக்குக் கிடைத்த பேறாகும்.

– இசைவாசி

உலக நாடுகள் இந்தியாவைப் பார்த்து வியக்கும் ஒன்று எதுவென்றால் கட்டுடைக்காமல் குடும்ப அமைப்பாக வாழும் வாழ்க்கை முறையாகும். இனக்குழு முறைதான் தனி கூட்டுக் குடும்பமாக மாறியது. கூட்டுக்குடும்பம் இன்று தனிக் குடும்பமாக மாறி வருகிறது.

ஒரு நாளைக்கு 24 மணி நேரம் 30 மணி நேரமாக மாறினாலும் அவசர அவசரமாக வாழும் மனிதர்கள் அப்போதும் அவசரமாகதான் வாழ்வார்கள். இந்த அவசர வாழ்க்கையில் தாத்தா பாட்டிகளின் உறவை குழந்தைகளுக்கு கொடுக்காமல் பிஞ்சு உள்ளங்களை தீவாக வைத்திருக்கிறார்கள். மாலை 6 மணி சூரியன் மறையும் நேரத்தை எதிர்பார்த்து தாத்தா படுத்திருக்கும் கட்டிலை நோக்கி வேகமாக ஓடி "தாத்தா கத சொல்லு தாத்தா" என்று மழலைக்கு உரிய வார்த்தையில் குழந்தை கேட்கும். படுத்துக் கொண்டே பேரனை வயிற்றுமீது அமர வைத்து கதை சொல்லும் தாத்தாவின் கதைக்கு எத்தனை சினிமாக்கள் வந்தாலும் அந்த சுவாரஸ்யத்தை தந்து விட முடியாது. தாத்தாவின் மேலுள்ள சின்ன கோபத்தை உலக்கில் போட்டு வெற்றிலை பாக்கு குத்தும்போது தீர்த்துக் கொள்ளும் பாட்டியின் வழக்கம் கூட குழந்தைகளுக்கு ஒரு குதூகலம்தான்.

அண்ணன், தங்கை, தம்பி, அக்கா என வாழும் குடும்பத்தில் பிறந்த குழந்தை இயல்பாகவே நிறைய சிந்திக்க கற்றுக் கொள்கிறது. நம்பிக்கையோடு எதிர்காலத்தை அணுகுகிறது. வேலைக்குச் சென்று திரும்பும் தந்தை குழந்தைகள் கையைப் பார்க்கும் ஏதேனும் வாங்கி வரலாம் என்று திண்பண்டம் வாங்கி வந்து தரும்போது அண்ணனோ அக்காவோ சின்னவனுக்கு பாக்கெட்டோடு தரேனு சொல்லி நிறைய எடுத்துக்கொண்டு கொஞ்சத்தை மட்டும் பாக்கெட்டில் தரும் சூட்சமம் இருக்கிறதே அது கூட கூட்டுக்குடும்பத்தின் அழகான நிகழ்ச்சிதான். "இரும்பேர் ஒக்கலோடு ஒருங்கு இனிது அருந்தி" சீறூர் மன்னனைப் பற்றி புறநானூறு கூறும் சொல்லாகும். உணவு உண்ணும் போது உறவினர்களோடு உண்ணுவதை வழக்கமாக வைத்திருந்த பரம்பரை தமிழ்ப் பரம்பரை. யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற சங்க இலக்கிய புறநானூற்று வரி கூட இனக்குழுவின் அடையாளத்தை வைத்தே எழுத பெற்றிருக்கிறது.

குடும்ப அமைப்பின் அருமையை எடுத்துச் சொல்ல வள்ளுவன் இல்வாழ்க்கை என்னும் அதிகாரத்தை வைத்தான்

■ *பொன் என்பதும் தங்கம் என்பதும் ஒன்றா? அல்லது வெவ்வேறா?*

● *பொன் என்பதற்குப் பல பொருள்கள். அவற்றுள் ஒரு பொருள் உயர்ந்த மஞ்சள் உலோகத்தைக் குறிப்பது. தங்கம் என்பது தூய்மையான பொன்னைக் குறிக்கும். எந்தக் கலப்படமும் இல்லாதது, மாசறு பொன் எனில் அது தங்கம்.*

மகுடேசுவரன் கோவிந்தராசன்

போலும். இல்வாழ்க்கையின் கருவறையாக விளங்குபவர் மனைவிதான். மனைவியின் அன்பையும் அரவணைப்பையும் பெற்று வாழ்ந்து விடுவது இப்பிறவியின் பயன்.

"பெருவது எவன் இல்லவள் மாண்பானால்" மனைவியுடன் மகிழ்ச்சியோடு மாண்பாக வாழும் பாக்கியம் கிடைத்து விட்டால் அதைவிட வரம் வேறெதுவுமில்லை என்ற நோக்கில் பொது மறையின் பொது மனிதன் கடாவுகிறான்.

"மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்" நல்ல வார்த்தைகள். இம்மொழிக்கு ஏற்ப இல்லவள் கிடத்தால் அது நல்ல வரபிரசாதம். நல்ல மனைவி அமைந்து விட்டால் வாழ்க்கையில் எல்லா சிறப்பும் அண்மையில் வந்து நம்மை மகிழ்ச்சியில் ஆழ்த்தும்.

இல்வாழ்க்கை என்னும் சொல்லுக்கு அபிதான சிந்தாமணி "கிழவோன் மகிழ்ச்சி முதலாகச் செவிலி மகிழ்ச்சி ஈறாக" என்று பொருள் தருகிறது. இல்வாழ்வான் என்பதற்கு இல்லா சிரமத்தவன் என்றும் பொருள் விளக்கம் மொழிகிறது. துன்பம் இல்லாமல், துன்பப்படுத்தாமல் வாழ்பவன் இல்வாழ்க்கையை மேற்கொண்டவனாவான்.

மதுரைத் தமிழ் பேரகராதி இல்லறம் ஒரு கற்பு துறை என்று இல்வாழ்க்கையை விவரிக்கிறது. கற்பு என்றால் உறுதி என்கிற பொருள் இருக்கிறது. இங்கு கற்பு என்பது

மன உறுதியைக் குறிக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். மன உறுதியோடு இல்வாழ்க்கையை நடத்தி கணவனும் மனைவியும் மகிழ்ச்சி குறையாமல் வாழ்ந்து பிறர்க்கு உதாரணமாக வாழ வேண்டும் என்பதே இதன் விளக்கமாகும்.

சாக்ரடீஸ் மனைவி எப்போது பார்த்தாலும் அவரைத் திட்டிக் கொண்டு இருப்பது வழக்கம். (அவருக்கு மட்டுமா இங்கியும்தான் என்கிறீர்களா?) ஆனால் அதை பெரிதாக எடுத்துக் கொள்ள மாட்டார். நகைச்சுவையாகப் பார்ப்பார். ஹிட்லர் மனைவி அவர்மேல் அன்பைப் பொய்யாக செலுத்திக் கொண்டிருந்தார். எப்போதும் தேவைக்காக மட்டுமே ஹிட்லரை சந்திக்க வருவார். ஆனால் ஹிட்லர் அப்படி நடந்து கொள்ளவில்லை. மனைவி இறந்து விட்டாள் என்றறிந்து தனி அறையில் 7 நாட்கள் தனிமையில் மனைவியின் இழப்பை தாங்கிக் கொள்ள முடியாமல் தவித்திருக்கிறார். கணவன் மனைவி இடையே சாந்தமான சூழல் நிலவினால் அது சொர்க்கமாகும். அதனால்தான் திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகிறது என்கிறார்கள்.

தாய்மை இல்லாமல் போயிருந்தால் இந்தப் பூமிக்கு உயிர்க்கோள் என்னும் பதவி பிரமானம் கிடைத்திருக்காது. அம்மாவின் அன்பான வார்த்தைகளில் குடும்பம் அழகாக சுழன்று கொண்டிருக்கிறது. உணவு அருந்தும் நேரத்திலும், வெளியில் சென்று வரும் நேரத்திலும் அனைவரும் ஒன்றாக செல்கையில் அலுவலகத்தில் நடந்தது பள்ளிக் கூடத்தில் நடந்தது பக்கத்து வீட்டம்மா பேசியது என்று தனக்கு நடந்த நிகழ்வுகளைப் பரிமாறி கொண்டே போகையில் அவ்வளவு ஆனந்தமாக அதை அனுபவித்து பேசுவோம். அந்த ஆனந்தத்திற்காக எப்போது விடுமுறை வரும் எப்போது ஞாயிற்றுக் கிழமை வரும் என்று ஏங்கும் மனத்திற்கு தெரியும் குடும்பம்தான் சொர்க்கம் என்று.

உறவுகளைப் பிரிந்து பணியின் நிமித்தமாக தனிக் குடித்தனம் சென்றவர்களுக்கு பக்கத்து வீட்டுக்காரனை கண்டால் கூட இவனால் ஏதேனும் நிகழ்ந்து விடுமா? என்று அச்சம் அடைவதே வாழ்க்கையாக மாறிபோகும். அதுவும் தனிக் குடித்தனம் நடத்தும் குடும்பத்திலுள்ள குழந்தையை நினைக்கும்போது அந்தோ பரிதாபம். விளையாட ஆளில்லாமல் தொலைக்காட்சியில் வீடியோ கேம்களின் போலிகளில் வாழ்க்கையின் அசலை மறந்து விடுகிறது. பிறகு சமுதாயத்தில்தைரியமாகப்

பேசும் வார்த்தை கூட அவர்களுக்கு கிடைப்பதில்லை.

பள்ளிக் கூடங்களுக்கு பல கிலோ மீட்டர் தூரம் நடந்து சென்று பள்ளி முடிந்ததும் தோழர் தோழிகளோடு வீடு திரும்பும் குழந்தைகள் வழியில் எத்தனை விதமான காட்சிகளை மனிதர்களைப் பார்த்து முகத்தில் புன்னகை மறையாமல் மகிழ்ச்சியோடு வரும். அங்கு பல கற்றலை அது கற்றுக்கொள்கிறது. அரணையைப் பார்த்தால் இன்ஸிலோடு பயந்தபடிக்கு பெயர் சொல்ல வேண்டும் என்ற அறியாத அறிவு. ஓணானை துணிச்சலாக கையில் பிடிக்கும் தைரியம். பொன்வண்டு தட்டான்பூச்சி பட்டாம் பூச்சி என நடந்து பள்ளிக்கூடம் சென்ற குழந்தைகளுக்கு இருந்த ஆனந்தம் சொகுசாக பள்ளி வேனில் சென்று ஸ்பேன் காற்றில் ஏசி அறையில் படித்துவிட்டு வீடு திரும்பும் குழந்தைக்கு இருக்குமா என்பது அரிதாக தெரிகிறது.

"போதும் பொண்ணு" இதுவே பெண் சிசுவை பெறும் கடைசி பிரசவமாக இருக்கட்டும் என்று இப்பெயரை கடைசி குழந்தைக்கு வைப்பார்கள். பொருளாதார ரீதியாக கூட்டுக்குடும்பம் பின் தங்கியதாக இருந்தாலும் அன்பின் பரிமாற்றத்திற்கு குறைவு இருக்காது.

பிரபல தொலைக்காட்சிகளில் சீரியல்கள் வெற்றிகரமாக பயணிக்க காரணம் குடும்ப நிலைகளை எடுத்துச் சொல்லும் விதமும் அன்புக்கும் மதிப்புக்கும் ஏங்குபவர்களுக்கும் பிடித்தது போல நிகழ்வுகளை காண்பிப்பதுதான் காரணம். ஆகையால் சீரியலுக்கு ஈர்க்கப் படுகிறார்கள்.

தன் மனத்திற்குள் தங்கி விடுகிற உறவுகளின் உன்னதமான நிகழ்வுகள் சீரியலில் வெளிப்படும் போது அதை விரும்ப ஆரம்பித்து பிறகு அதைபோலவே தன்னுடைய வாழ்க்கையும் அமைந்து விட வேண்டும் என்ற எதிர்பார்ப்புகள் சீர்டியலை மெகா சீரியலாக மாற்றி விடுகிறது.

ஒரு காலகட்டத்தில் குடும்ப கதைகளை மையமாகக்கொண்டு எடுக்கப்பட்ட திரைப் படங்கள் மக்களிடையே பெரும் பிரபலமடைந்து வெற்றி நடை போட்டது என்றால் அது குடும்ப உறவுகளை நேசிப்பவர்களால்தான் என்னும்போது நம்முடைய இதயம் உறவுகளை நேசிக்கிறது என்று பெருமைபடலாம். வாழ்க்கை தொலைந்தது தெரியாமல் பணத்தைத் தேடுபவர்கள் பரிதாபத்திற்கு உரியவர்கள். இல்வாழ்க்கையின் சிறப்பு இரண்டு காரணிகளால் மதிக்கப்படுகிறது. ஒன்று சம்பாத்தியம். இரண்டு பிள்ளைப் பேறு. அதை வள்ளுவன் "பழியஞ்சி பாத்தூண் உடைத்தாயின் இல்வாழ்க்கை" என்பான். பழி உண்டாகும்படி சம்பாதிக்காமல் நேர்வழியில் உழைத்து சம்பாதிக்க வேண்டும். ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் வள்ளுவனின் பார்வையில் பிரசவம் மட்டும் பிறப்பில்லை தன் மகனை சான்றோன் என கேட்டத்தாய் என்று போற்றப்பட வைப்பதே உண்மையான பிறப்பின் அர்த்தம் என்று படுகிறது. கல்வியிற் சிறந்த நற்பண்புகளில் உயர்ந்த சான்றோர் பெருமக்களால் சான்றோன் என புகழப்படுவதே இரண்டாவது பிறப்பு. இந்தப் பிறப்பை

"என் உடலை விதைத்திருக்கிறார்கள்
என் மார்புக் காம்புகள் நீரூற்ற
பூச்செடிகளும் மரங்களும்
துளிர் விட்டு வளர்ந்து
விருட்சமாயிருந்தன.
விளையாட
சிட்டுக் குருவிகளும் புறாக்களும்
போட்டியிட்டன.

உழுதார்கள் விதைத்தார்கள்
அறுவடை செய்தார்கள்.
காலாதீதத்தில்
என் உடல்
நல்ல விளைநிலமாயிருந்தது.
வண்ணத்துப் பூச்சிகளும்
தேடி வரும் ஆவலில்
பூச்செடிகளுக்காய் ஏங்கியிருந்தேன்.
முட்களுக்கும் சுள்ளிகளுக்கும்
அதிக தேவையிருந்ததால்
என் உடலில் அதிகம் விதைத்தார்கள்.

என் பால் வாசம் நுகர்ந்து
வேலி வரை வந்து
உள் நுழைய முடியாமல்
தவித்துக் கொண்டிருக்கும்
வண்ணத்துப் பூச்சிகளுக்காகவும்
தட்டான்களுக்காகவும்
என் உடலை சுருட்டிக் கொண்டு
தொட்டிச் செடி பூவாக்கி
காத்திருக்கிறேன்.
சூரியனுக்கு வெகு கீழே."

கவிதாயினி அ. வெண்ணிலா

குறள் வெண்பா

செல்வம் வறுமை திறமை வருவதெல்லாம்
எல்லாம் அவன் செயலே இங்கு

வண்ணவண்ண ஆசை மனத்துள் இருந்தாலும்
எண்ணம்போல் வாழ்வமையும் இங்கு

தலைவரின் நற்பண்பு தாங்கும் உறுப்பை
நிலைஎதிலும் நீங்காமல் நின்று

ஒன்றுமை இன்றி உளம்போலச் செய்பவன்
பற்றினைப் போக்கும் பதர்

தூரும்புமேபல் குத்த துணையாகும போல
வரும்பகை மாற்றும் மனம்

பெற்றவரைக் காக்காத பிள்ளைகள பின்னாளில்
பெற்றவரால் காக்கப் பெறார்

கவிமாமணி சேலம்பாலன்

எண்ணித்தான் தாய் பெரிதும் உவக்கிறாள். அந்தப் பாக்கியத்தை மகன்களும் மகள்களும் பெற்றோர்களுக்கு கொடுக்க வேண்டும்.

பெற்றவர்கள்
பெற்ற வரங்கள்
இசைவாசி

உண்மையான வரிகள். தவம் செய்து கிடைக்க வேண்டியவர்கள் தவம் செய்யாமல் கிடைத்தால் நாம் எவ்வளவு பாக்கியவான்கள்.

பிரபலமான ஹிந்தி நடிகை ஒருவர் அமிதாப்பச்சன் போன்ற முன்னணி நடிகர்களோடு நடித்து பேர்வாங்கியவர். கவர்ச்சி நடிகை என்பதால் பெரும் படங்களில் மட்டுமே நடிப்பதற்கு சம்மதம் தெர்விப்பார். பெற்றோர்கள் திருமணம் செய்து கொள்ள கேட்ட போது மறுத்து விட்டார். வயது 40 ஆன போது பெற்றோர்கள் அருகில் இல்லை. உறவினர்களின் ஒத்துழைப்பும் இல்லை. ஒரு நாள் வீடு திறக்கப்படாமலே இருந்தது. பால்காரனும் பேப்பர்காரனும் பல நாள் பாக்கெட்டுகள் இன்னும் எடுக்கப்படாமல் இருந்ததை பார்த்து காவல் துறைக்கு தெரி வித்தனர். காவல் துறை ஜன்னலில் பார்த்த போது இறந்து கிடந்தார் அப்பெண்மணி. உடல்நிலை சரியில்லாத போது கவனிக்க ஆளில்லாமல் ஏங்கி தவித்து இறந்திருக்கிறாள். கையில் ஒரு கடிதம் "தாமதமாக மட்டும் வாழ்க்கையைத் தேடாதீர்கள்" என்றதில் எழுதப்பட்டிருந்தது. அப்படி இறந்துபோகும்போது வாழ்க்கையை உணர்ந்து கொண்டவர்தான் பர்வின்பாபி.

வாழ்க்கையை அனுபவிப்பதில்தான் அதன் உண்மையான பயன் அடங்கி இருக்கிறது. அனுப்பி வைப்பதில் இல்லை. முதியோர் இல்லம் அதிகமாக உருவாகி கொண்டிருகக்கும் இக்காலத்தில் பிள்ளைகள் இல்வாழ்க்கையைப் பற்றிய புரிதலை ஏற்படுத்திக் கொண்டு வாழ்க்கை என்னும் கையிலுள்ள சொர்க்கத்தை அனுபவிக்க வேண்டும்.

பேச்சுப்போட்டியில் நானும் நண்பனும் கலந்து கொள்வது வழக்கம். அப்படி பங்கு பெற்ற ஒரு போட்டியில் அவன் சொன்ன ஓர் உண்மையை இங்கு பதிவு செய்ய வேண்டும். ஒரு மனிதனின் உடம்பில் 24 எலும்புகள் ஒரே நேரத்தில் உடையும் போது ஏற்படுகிற வலியை ஒரு தாய் தன் பிரசவத்தின் போது அனுபவிக்கிறாள் என்றான். ஆகையால்தான் என்னவோ ரூசோ ஒரு "பிரசவத்தில் தாயும் பிரசவிக்கிறாள்" என்றானோ? இந்த வலியைத் தெர்ந்து கொண்டால் எந்த மகனும் "என்ன ஏன் பெத்த" என்று கேட்கவே வாய் கூசுவான்.

பிள்ளைகளைச்
சான்றோனாக்கும் பெற்றோர்களும்
பெற்றோரைப் பெருமைப்படுத்தும்
பிள்ளைகளும் இல்வாழ்க்கையின் அழகுகள்
பிறவிகளில் சிறந்தவர்கள்...
வாழ்வை அமைத்து கொள்ளுவது
நம் கடமையாகும்...
இசைவாசி

சரஹா

மெல்லபுன்னகைத்து
என்னை அழைக்கிறாள்...
அழகின் விளிம்பில் நிற்கும் பருவம்
மிகைத்து அசத்துகிறது...
அவளை நோக்கி
காதல் பார்வை வீசியவர்களின் எண்ணிக்கை
கட்டுக் கட்டாய் விழுகிறது,
சீட்டுகளைக் குலுக்கிப் போட்டதாய்ச் சிரிக்கிறாள்,
நான், ஜோக்கராக எதனுடனும் சேராமல்
தனித்து நிற்கிறேன்...
அவள் அரபு நாட்டுச் சுந்தரியென்று
அடையாளம் காட்ட மறுத்தபோதுதான்
அறிந்து கொண்டேன்,
அவளுக்குக் கேள்விகள் கேட்பது மிகவும் பிடிக்கும்,
பதில் சொல்லும் ஆவலில்
ரம்மியிலும் சேரமுடியாமல் தவிக்கிறேன்...
நேரங்களைப் பிடுங்கி தின்றவள்
முடியாத ஆட்டமாய்த் தொடர்கிறாள்,
அவள் யாரென்றே தெரியாமல்
கூட்டத்தோடு கூட்டமாய் நானும் தொடர்கிறேன்,
இப்போதுதான் முதன் முறையாக
தன் கை விரல்களைக் காட்சிப் படுத்துகிறாள்,
நகங்களுக்குப் பதிலாகக் கத்திகள் தீட்டப் பட்டிருந்தன,
ஆச்சரியத்தில் விக்கித்து நிற்கிறோம்,
நரசமான கேள்விகளை இப்போது
நயமின்றிக் கேட்கத் தொடங்கிவிட்டாள்,
மூளைக்குள் எறும்புகள் கூடுகட்டத் தொடங்கின,
குதறும் கேள்விகளால் எங்களின் நரம்புகளையறுத்து
இரத்தம் உறிஞ்சுகிறாள்...
சாத்தானின் வாசகங்கள்
முதலில் தேவபாஷையாகத்தான் இருக்குமென்ற...
சூஃபியின் பாடலொன்று
எங்களை உசுப்பிவிட்டுக் கடந்து போகிறது,
சரஹா எங்களைப் பார்த்து மீண்டும் சிரிக்கிறாள்
உதிரம் தோர்ந்த இதழ்களைக் கண்டு பீதியில்
விக்கித்து நிற்கும் எங்களையும் விலக்கிவிட்டு
தாம்பூலம் தரித்த இதழ்தான் அதுவென்று
ஒருக் கூட்டம்
காதல் கடிதங்களைக் கையில் வைத்துக் கொண்டு
தொடர்கிறது...

முகமதுபாட்சா

பூவுலகின் பொன்மகள் !

பூத்துக் குலுங்கும் பூவே!
புன்னகைச் சிந்தும் மலரே!
நடந்து வந்த சிலையே!
நாடு அறிந்த கலையே!

பருவம் தந்த நிலவே!
பாடிப் பறக்கும் குயிலே!
உருவம் மலர்ந்த கிளியே!
உண்மை உரைக்கும் விழியே!

வெள்ளி முளைக்கும் வானே!
விருந்தாய் வந்த தேனே!
பொன்னாய் விளைந்த உருவே!
புதுமைப் படைக்கும் திருவே!

மண்ணில் காணா மணியே!
மனதில் புகுந்த ஒளியே!
கண்ணில் பெருகும் துளியே!
கண்டேன் என்னில் உனையே!

மோகம் தீர்க்கும் மயிலே!
முத்தாய் மிளிரும் இரவே!
தாகம் தீர்க்கும் நீரே!
தருவாய் எந்தன் உயிரே!

கையில் விழுந்த கனியே!
கட்டிக் கரும்பாய் இதழே!
பொய்மை இல்லாக் கவியே!
போற்றிடும் இந்தப் புவியே

கவிஞர்.அ.முத்துசாமி,
தாரமங்கலம்.

பிக் பாஸ் ஆரம்பிச்ச கொஞ்ச நேரம் பாத்ததோட சரி. அப்புறம் பாக்கல. கொஞ்ச நாளாவே டைம்லைன் முழுக்க ஓவியா.. ஓவியா னு வந்துட்டே இருந்தது.அப்படி என்ன அந்த பொண்ணு பண்னுது னு ஹாட் ஸ்டார் ல போய் பாத்தேன். பிக் பாஸ் 1 மணி நேரம் பாத்தேன்.. அப்புறம் நல்லாவே புரிஞ்சது. விஷயம் இது தான்..

அந்த பொண்ணு யார் என்ன நினைப்பாங்க னு நினைக்காம அதுக்காக தன் சுயத்தையும் இழக்காம இயல்பா கெத்தா இருக்கு.

நீ என்ன வேணும்னாலும் பேசு. எனக்கு அது தேவையில்ல. என் வழி தனி வழி.

நானா பிரச்சனை பண்ணமாட்டேன். நீ பண்ணா சும்மா இருக்க மாட்டேன்.

எனக்கு நான் தான் முதல் சப்போர்ட். நீ பண்ணா பண்ணு. பண்ணல னாலும் கவலை இல்லை. ஏன்னா உண்மை என்னனு பிக் பாஸ் கு(கடவுளுக்கு) தெரியும். So கவலை இல்ல.

Life ல பிரச்சனை வந்தா அழலாம்.. பிரச்சனையே life ஆ வந்தா அழாம sportive ஆ எடுத்துட்டு போய்ட்டே இரு. எல்லாரும் உன் பின்னாடி வந்துட்டே இருப்பாங்க..

உன்ன பத்தி பொரளி பேசுறாங்களா, நீங்க கொஞ்சம் shut up பண்ணுங்க னு சொல்லிட்டு அந்த இடத்தை விட்டு காலி பண்ணிட்டு ஜாலியா உன் வேலைய பாரு.

உனக்கு முன்னாடி யாராவது கஷ்டப்பட்டாங்கனா, பிரதிபலன் பாக்காம ஆறுதல் சொல்லு. முதுகுக்கு பின்னாடி ஒரு கூட்டமே உன்ன பத்தி பேசினாலும் கமல் மாதிரி சிங்கிளா ஒருத்தர் உன் நேர்மையை வெளிப்படுத்த நிச்சயம் இருப்பார்.

மொத்தத்துல நீ நீயா இரு.. அவ்ளோ தான் மேட்டரு.

இதனால தான் எல்லாருக்கும் ஓவியா வ பிடிச்சிருக்கு.நாமளும் இது மாதிரி இருக்க விரும்புவோம்.நாம எல்லாருக்கும் இதுல சில விஷயங்கள் பொருத்தமா இருக்கும். ஆனா நாலு பேரு என்ன சொல்லுவாங்களோனு அவங்களுக்கு புடிச்ச வாழ்க்கை வாழாம பேருக்கு வாழ்றவங்க தான் அதிகம். கொஞ்ச நாள் ஓவியா மாதிரி தான் வாழ்ந்து பாருங்களேன்.. Life interesting ஆ இருக்கும்.

யாராவது உங்கள பத்தி பேசினா அவங்கள shut up பண்ணுங்க.. அவ்ளோதாங்க.. life நல்லா இருக்கும்.

ஹேமா பிரகாஷ்

பூக்கும் விடியல்

நாடு போகும் போக்கைப் பார்த்தால்
நாளும் நெஞ்சு அதிர்ந்து போகும்
கேடு களைய துணிவு கொண்டே
கைகள் கோத்தால் புதுமை தோன்றும்!

கற்ற இளைஞர் சுற்று கின்றார்
கல்விக் கேற்ற வேலை இல்லை
பெற்றுத் தள்ளும் பன்றி போல
பெருகும் பள்ளிகள் குறைய வில்லை!

சாதி ஒழிய முழக்கம் செய்வார்
சாதிக் குள்ளே மணம்மு டிப்பார்
சாதி விட்டுக் காதல் செய்தால்
சாவை அவர்க்குத் தெருவில் தருவார்!

கண்ணகி அன்று மதுரை எரித்தாள்
கணவன் குற்றம் களைவ தற்கே
பெண்கள் இன்று நெருப்பில் எரிந்தார்
பேணக் கணவன் கேட்குத் தொகைக்கே!

உயிரைக் கொடுத்து விடுதலை பெற்றார்
உரிய பயன்கள் கிடைக்கு மென்றே
பயிரை மேயும் ஆட்சி யாலே
பட்டினிச் சாவே பெருகிய தின்றே!

இலஞ்ச ஊழல் பெருகிப் பெருகி
இரத்தக் காடாய் ஆனது நாடு
வளங்களை எல்லாம் தலைவர் சுருட்ட
வாக்க ளித்தவர் கைகளில் ஓடு!

நிலங்கள் ஏரிக் குளங்களி லெல்லாம்
நிற்குது கற்கள் விற்பனை கூறி
கலங்கிக் கலங்கி உழவன் மிதந்தான்
கடனில் மூழ்கிப் பிணமாய் நாறி!

கொள்ளைக் கொலைகள் செய்தவ ரெல்லாம்
கொடுஞ்சிறை தன்னில் சொகுசாய் உள்ளார்
வெள்ளைப் பணத்தைக் கறுப்பாய்த் தள்ளி
வேண்டிய வசதிகள் பெறுகின் றார்கள்!

நீதிக ளெல்லாம் நிதியின் பின்னால்
நிற்குது கைகளைக் கட்டிக் கொண்டு
போதி மரத்துப் புத்தன் கூட
பொய்யை விற்கிறான் வாங்கிக் கொண்டு!

சட்டம் ஒழுங்கைக் கயவர் கூடிச்
சட்டைப் பைக்குள் அடக்கு கின்றார்
சட்ட மன்ற உறுப்பின ரெல்லாம்
சடுதியில் பையை நிரப்பு கின்றார்!

நீரின் சிக்கலும் கல்வியின் சிக்கலும்
நிரந்தரச் சிக்கலாய் ஆன தின்று
ஊரினைச் சுற்றிடும் அமைச்ச ரெல்லாம்
உளத்தில் பதித்துத் தீர்ப்ப தென்று!

மக்கள் நாமோ அமைதி காத்தால்
மரண ஓலமே காதில் கேட்கும்
அக்கம் பக்கம் அனைவர் ஒன்றாய்
ஆர்த்தே எழுந்தால் விடியல் பூக்கும்!

பாவலர் கருமலைத்தமிழாழன்

இரு கோப்பை தேநீரும், இதயங்களின் காதலும்...!!

ஒரு வருசமா பேஸ் புக் மூலமா தான் ஜானுவை தெரியும். சாட்டிங்கல நிறைய விஷயம் பகிர்ந்து கொண்டிருக்கிறோம். எங்ககுள்ள ஏதோ ஒண்ணு ஒத்து போகவே தொலைபேசி எண்ணையும் பரிமாறி கொண்டோம். நிறைய விஷயம் தொலைபேசி மூலமாகவும் பேசி இருக்கோம். ஒரு ரெண்டு தடவை ஸ்கைப்லயும் வீடியோ சாட்டிங் மூலமா பேசி இருக்கோம். இது வெறும் நட்போட முடிஞ்சிட போறது இல்லைனு மனசு சொல்லுச்சு. அதான் ஒரு நாள் என் லவ்வை தொலைபேசி மூலமா சொல்லிட்டேன்.

நேர்ல பார்க்கணும்னு சொன்னா! எல்லாரும் காதலியை காஃபீ ஷாப் தான் கூப்பிடுவாங்க. ஆனா... நான் என் ஜானுவை அண்ணாநகர் நாயர் டீ கடைக்கு வர சொன்னேன். அவளும் க்ரீன் கலர் சுடியில ஸ்கூட்டியில தேவதை போல வந்திறங்கினாள்.

ஹாய் என்றாள். நானும் ஹாய் என்றேன்.

அவளை நேரில் பார்ப்பதற்கு தேவதை போல இருந்தாள். நான் கொஞ்சம் சுமார் தான். இந்த சுமார் மூஞ்சி குமாரை அவளுக்கு பிடிக்குமா என உள்ளுக்குள் பக்கு பக்குனு எனக்கு நானே (மனசுக்குள்ளே) கேள்வி கேட்டு கொண்டேன்.

நாயர் கடையில் மசால் வடையும் டீயும் செம டேஸ்ட்டா இருக்கும். அதனாலே ஆளுக்கு ரெண்டு மசால் வடையும் ரெண்டு

டீயும் ஆர்டர் செய்தேன்.

நாயர் டீ டிஸ்போஸபிள் கப்ல வேண்டாம். கண்ணாடி கிளாஸ்ல வெந்நீர் போட்டு கழுவிட்டு ரெண்டு டீ போட்டு கொண்டாங்க என்றேன்.

ஏன் இந்த 21 ஆம் நூற்றாண்டிலும் கண்ணாடி கிளாஸ்ல தான் டீ குடிப்பேன்னு அடம் பிடிக்கிற? அதுவும் எல்லாரும் வாய் வச்சு குடிக்கிற கப்ல

ஓஒ... வ்வ்வ்வ்... நினைச்சாலே குமட்டிக் கிட்டு வருது... ஜானு எச்சினாலும் குடிச்ச கண்ணாடி டம்ளரை கழுவிட்டு தான் டீ போட போறார்... காதலர்களின் எச்சிலுக்கும் புனிதம் உண்டு... அதை மறந்திடாதே... டிஸ்போஸபிள் (மெழுகு ஒட்டப்பட்ட பிளாஸ்டிக்) கப் ல குடிச்சு அல்சர் மற்றும் புற்று நோய் வந்து சாவுறதுக்கு கண்ணாடி டம்ளர்ல குடிச்சிட்டு உன்னோட நூறு வருஷம் வாழ்ந்திட்டு போயிடுறேன்... என்னை நீ பழைய மஞ்ச மாக்கான்னு வேணா திட்டிக்கோ... ஆனா ப்ளீஸ் அந்த பிளாஸ்டிக் கப் ல எதுவும் குடிக்க வேணாம்... நீயும் நூறு வருஷம் நோய் நொடி இல்லாம நல்ல படியா வாழனும்... ப்ளீஸ் ஜானு எங்கே போனாலும் பிளாஸ்டிக் கப்ல குடிக்காதே ப்ளீஸ் என்றான் குமார்...

ஜானு குமாரின் முகத்தை பார்த்து ஐ லவ் யூ என்றாள்.

நாயர் இரண்டு கண்ணாடி டம்ளரில் சூடு பறக்க இரண்டு டீ யை வைத்தார்.

தேநீரின் நறுமணத்தால் அங்கு இருவரின் இமைகளின் வழியே காதல் இதயங்களில் ஊடுருவியது. ■

உன் பாதையில் போய்க் கொண்டிரு!
விமர்சிப்போரை விட்டுவிடு!
ஏனெனில், அவர்களுக்குப் பாதை என்பதேக் கிடையாது!

இதயத்தைக் காக்கும் இனிமைக்காதல்!

காதல் இதயத்தில் இருந்து வருகிறதா? அது மூளை தொடர்புடையதா என்று ஆராய்ச்சி நடந்து வரும் வேளையில், "காதலித்தால் அது இதயத்தை பாதுகாக்கிறது, இதயநோய்கள் ஏற்படாமல் தடுக்கிறது" என்று ஒரு ஆய்வு முடிவு தெரிவிக்கிறது.

"திருமணம் மூலம் ஏற்படும் குடும்ப உறவு, தம்பதியருக்கிடையே ஏற்படும் இணக்கமான தாம்பத்தியம் இதய நோய்களை தடுக்கிறது" என்று பிட்ஸ்பெர்க் பல்கலைக் கழக ஆய்வாளர்கள் தெரி வித்துள்ளனர். காதல் நினைவு களும், காதல் உணர்வுகளுமே நம்மை உயிர்ப்போடு வைத் திருக்குமாம்; இதனால் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரித்து உடலில் எந்த நோயும் ஏற் படாமல் பாதுகாக்கிறது என்கின்றனர் உளவியல் ஆய்வாளர்கள்.

"காதலிக்கும் மனதில் எப்போதும் உற்சாகம் ஊற்றெடுத்துக் கொண்டிருக்கும். புதிதாய் பிறந்ததைப் போல உணர்வீர்கள். நேர்மறை எண்ணங்கள் அதிகரிக்கும். நம் இன்ப துன்பத்தில் பங்கு கொண்டு நம் நலனில் அக்கறை கொள்ள நமக்காக ஒருவர் இருக்கிறார் என்ற எண்ணமே உற்சாகப்படுத்தும். துன்பம் வரும் நேரத்தில் சாய ஒரு தோள் கிடைத்திருக்கிறது என்ற எண்ணமே நோய், நொடி எதுவும் ஏற்படாமல் தடுக்கும்" என்கின்றனர் நிபுணர்கள்.

காதல் என்பதே கெட்ட வார்த்தையாகி விட்டது நம் சமூகத்தில். இள வயதில் அதிலும் குறிப்பாக திருமணத்திற்கு முன் ஒரு ஆணும், பெண்ணும் கொள்வது மட்டுமே காதல் என்பதாக நிலை பெற்றுவிட்டது. இது மிகத் தவறான கண்ணோட்டமாகும். காதலுக்கு வயதோ திருமணம் போன்ற நிகழ்வுகளோ தடையில்லை. இரு உள்ளங்களுக்கிடையேயான எதிர்பார்ப்பில்லா நட்பே காதலாக பரிணமிக்கிறது.

"தம்பதியர்களிடையேயான, காதல் நினைவுகள் மூலம் உடலும் உள்ளமும் உற்சாகம் அடைவது உண்மைதான்" என்கின்றனர் நிபுணர்கள். பெங்களூரைச் சேர்ந்த நரம்பியல்துறைப் பேராசிரியர்கள் மேற்கொண்ட ஆய்வில், "காதல் உணர்வுகளினால் ஒவ்வொரு நரம்பிலும் உற்சாகம் ஊற்றெடுக்கும். சோர்வு நீங்கி சுறுசுறுப்பு அதிகரிக்கும்" என்பன போன்ற முடிவுகளைப் பெற்றனர்.

தம்பதியர்களே, உங்கள் துணையைக் காதலித்துதான் பாருங்களேன்!

நூல் விமர்சனம்

நூல் :

வலைக்குள் மலர்ந்த வனப்பு

நூலாசிரியர் :

பாலமுனை பாறூக்

விமர்சனப்பார்வை :

அட்டாளைச்சேனை எஸ்.எல். மன்சூர்

உலக வரலாற்றினை மாற்றியமைப்பதில் மற்ற எல்லாவற்றையும் விட இலக்கியத்திற்கு அதிக ஆற்றல் இருப்பதாகக் கூறுவர். ஏனெனில், அறிவுத்துறைகள் மனிதரின் மூளைக்கு மட்டும் எட்டி இயங்குவன. ஆனால் உணர்ச்சிக்கு இலக்கியங்கள் முழுவடிங்களை வழங்கும். ஒரு சமுதாயத்தின் விருப்பு வெறுப்பு நம்பிக்கை முதலியவற்றை வளர்த்துப் பண்படுத்துவது அந்தச் சமுதாயத்தின் இலக்கியமே ஆகையால் அதுவே மனித வாழ்வைப் பெரிதும் மாற்றியமைக்கிறது. ஆகவே சட்டம் அறிவியல் முதலிய எல்லாவற்றையும் விடப் பெரிய கருவியாய்ச் சமுதாயத்தை உருவாக்குவது இலக்கியம் என்கிறார்கள் அறிஞர்கள். இன்று இந்த இலக்கியத்தின் வியாபகத்தன்மை விரிவடைந்து நவீனத்துவத்தின் வழியாக முகநூலின் முகவரிக்குள் வீழ்ந்து அனைவரையும் ஆட்சிக்குட்படுத்தியிருக்கிறது இலக்கியம். அந்த வகையில் முகநூலின் வழியாக முத்தெடுத்திருக்கிற பலரை உயர்த்தியிருக்கிறது. நிலைமாறும் உலகில் நிலைத்து நிற்கும் வகையில் கவித்துவத்தின் எழுச்சி இலக்கியத்தின் ஆணிவேராக காணப்படுகின்றமை பலரையும் உட்சாகப்படுத்தியிருக்கிறது.

அந்த வகையில் ''வலைக்குள் மலர்ந்த வனப்பு'' என்கிற கவிதை நூல் அண்மையில் ஸ்ரீலங்கா-தென்கிழக்கின் பிரதேசமான பாலமுனையில் வெளியிடப்பட்டிருக்கிறது. நாடறிந்த கவிஞர் பாலமுனை பாறூக் அவர்களின் முகநூலில் மலர்ந்த கவி வித்துக்களை முளைக்கச் செய்திருக்கிறது இந்நூல். வலைத்தளம் பரந்து வியாபித்திருக்கிறது. பல கவிஞர்களையும், கவியாக்கக் கூடியவர்களையும் இணைத்துள்ளது. அந்த வகையில் எழுச்சிபெற்றுள்ள மூத்த கவிஞர் பாறூக் எழுதிய பல கவிதைகளை ஒன்றுதிரட்டி நூலாக்க உதவியிருக்கிறார் தமிழ்நெஞ்சம் இதழின் ஆசிரியர் அமின் மொஹமெட் அவர்கள்.

பாலமுனை பாறூக் கவியுலகில் "பதம்" என்னும் கவிதையை பதம் பார்த்து, ''சந்தனப் பொய்கை'' யில் வாசத்துடன் நுழைந்து, "கொந்தளிப்பு" என்கிற வாழ்வியலின் சோதனைக்குள் அகப்பட்டு ஒரு வழியாக தலைநிமிர்ந்து, ''தோட்டுப்பாய் மூத்தம்மா'' வின் மடியில் தவழ்ந்து, ''எஞ்சியிருந்த பிரார்த்தனைகளோடு'' தட்டுத்தடுமாறிய நிலையில் வெளியேறி, ''குறும்பாக்கள்''

எனும் பாவுக்குள்ளிலிருந்து விடை கொடுத்து, வெற்றிநடை போட்டவர் இன்று ''வலைக்குள் மலர்ந்த வனப்பு'' எனும் வளமிக்க வனப்புக்களோடு மகிழ்ச்சியடைந்திருக்கிறார் கவிஞர். புதுவிதமான நினைவுகளோடு, தன் எழில் நடையுடன் கவிநடைபோட்டு கவிபாடுகிற அழகு மிகவும் உருசியானது. அந்த வகையில் இவரது கவிதைகள் நயமிக்கவை. இரசிக்கக்கூடியவை. எளிதில் புரிந்து கொள்ளக் கூடியதாகவே இருக்கும். அந்தவகையில் இந்நூலிலிருந்து சில கவி வரிகளை நோக்கலாம்.

மலர்ச்சி எனும் தலைப்பில்

''மலர்ந்த காலையில்
மலர்வோம் புதிதாய்!
புதிய ஆள்
புதிய நாள்
என்று மலர்ந்த
எண்ணங்க ளோடு
தொடங்குவோம் பணிகள்
பழையன கழித்தே!''

என்கிறார் கவிஞர்.

மேலும், வெற்றி எனும் தலைப்பில்

''புன்னகையும் மௌனமுமாய்ப்
பூத்திருக்கும் மானிடர்க்கு
எந்நாளும் வெற்றி நிச்சயம்''

என்கிற வரிகளில் மனித வாழ்வின் அர்த்தத்தை அளவிடுகிறார்.

ஆட்சி எனும் தலைப்பில் ஒரு வித்தியாசமான படிமத்தை உதிர்த்திருக்கிறார்.

''இப்பொழுதும் நாங்கள் வந்திருப்பது
ஒன்பதாம் இலக்க அறைதான்
ஆணி கழன்று
அது ஆறாகத் தெரிந்தது!
நாம் நினைத்த ஆட்சி ஒன்று,
நாம் அடைந்திருக்கிற
ஆட்சி வேறொன்று''

என்று தன் கவித்துளியின் வழியாக ஆட்சிக்கு நடந்திருக்கும் கோலத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்.

இனவாதம் எனும் தலைப்பில் இனத்தைப் பிரித்தாள நினைக்கும் அசுரர்களை கொசுக்களுக்கு சமப்படுத்தி தன் வாதத்திறமையை முன்வைத்திருக்கிற கவித்துளிகள் சிறியதாக இருப்பினும் அதன் காரம் கடுமையானது.

''உயரத்தில் பறக்கிறது கொடி
தொட்டுவிட முடியாத படி
இன்னும் தான் பிரிக்கிறதே
இனவாதக் கொசுக்களின் கடி
ஒற்றுமைப் படாத படி!''

என்கிற வரிகள் இனத்தை பிரித்தாள நினைக்கும் இனவாதிகளின் வயிற்றில் அடிக்கிறார்.

அரசியல், சமூகம், ஒற்றுமை, வேற்றுமை, சமயம், மனப்பாங்கு, பக்குவம்,

பிரிவு, உயர்வு, அறிவு, கருத்தாடல் என்கிற பல்வேறு முகத்தாள்மைமிக்க விடயங்களை தன் கவித்துவப் புலமையினால் எழுத்தார்வத்தின் மேலீட்டினால் முகநூலின் வழியாக தந்திருக்கிற இக்கவிதைகள் பலவற்றை இதன் அர்த்தங்கள் பகிரப்படுகின்ற விதம் சற்றுவித்தியாசமானதுதான். இருப்பினும் அதிகதூரம் அரசியலுக்குள் ஊடுருவி, சமூகத்தின் நிலைமைகளை உச்சாடமாய் நின்று நிதானித்து விளக்கம் தருகின்ற கவிஞரின் வரிகள் வாசிப்புக்கும், கேட்டலுக்கும் உந்து சக்தியாக அமைகின்றன என்பதைத்தான் நாம் இங்கே கூறவேண்டியிருக்கிறது.

வலைக்குள் மலர்ந்த வனப்பு சிறப்பான அட்டைப்படம் உள்ளத்தை கொள்ளை கொள்ளச் செய்கிறது. அட்டைப்படத்தையும் உள்பக்கங்களையும் வடிவமைத்த தமிழ்நெஞ்சம் அமின் அவர்களுக்கும் பாராட்டுகள்.

கவிஞரின் நூலுக்கு பலர் ஆறுதல் இட்டு வாழ்த்தியும் போற்றியும் எழுதியுள்ளனர். அபாபீல் கவிதை வட்டத்தின் கவிஞர் தீரன் ஆர்.எம். நவ்சாத் தன் வாழ்த்துறையில்

''பாலமுனை பாறூக்
கென்னும் பேரன்
பாலயமுதல் பாக்களிலே வீரன்
படைத்திட்டான் பதம் என்றே
பசும் கவிதை தொகுப்போன்றே
படித்தின்புற வாங்கித்தான் பாரேன்...''

என்று கவிஞரின் கவிநுட்பத்தின் வழியாக

சிரி... சிரி...

"ஒற்றுமையே வலிமைங்கிறதை நேற்றுதான் புரிஞ்சுகிட்டேன்"

"எப்படி?"

"எங்க வீட்டில் உள்ள எல்லா கொசுக்களும் சேர்ந்து கொசுவர்த்தி சுருளையே தூக்கிட்டு போயிடுச்சு."

பெற்ற நூல்களுக்கு விளக்கம் தந்து வாழ்த்தியிருக்கிறார். மற்றவர்களையும் வாசிக்கத் தூண்டியிருக்கிறார்.

பாலமுனை பாறூக்கினது இந்நூலுக்குள் பாவலர் சாந்தி முகைதீன் பாவாழ்த்து ஒன்றை உதிர்த்து ஆசியுரை விருது பாவடிவில் வழங்கியிருக்கிறார்.

''பாவுக்கு வேந்தன் அவன் பாவேந்தன்
பாலமுனை பாறுக்கோ நாவேந்தன்
ஊருக்குள் நடப்பதையும்
உணர்வுகளில் தெளிவதையும்
பாவுக்குள் ளாக்கிடுவான் பாவேந்தன்
பாலமுனை பாறூக்கோ நாவேந்தன்...''

என்று நீண்டதொரு பாவினையாத்திருக்கிறார் பாவலர்.

அணிந்துரையினை வழங்கிருக்கும் முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஜவாத் மரைக்கார் கவிஞரின் கவித்துவப் புலமைகளை விளக்கமாகத் தந்திருக்கிறார். இந்நூலுக்கு சிறப்புரை ஒன்றினை வழங்கியிருக்கும் திருச்செங்கோடு அறிவியல் மகளிர் கல்லூரியின் தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் இசைவாசி க. சிவராஜ் ''இலக்கண முறையிலும் புதுக்கவிதை வடிவிலும் பேச்சு வழக்கிலும் கவிதை நூல் அமைந்திருப்பதால் அதில் கவிஞருடைய பன்முகம் தெரிகிறது. மேலும், பல கவிதந்து பாரை உயர்த்திட வேண்டும்'' என கவிஞரை வாழ்த்தியிருக்கிறார்.

நூலுக்கான மகிழ்ந்துரையினை பிரான்ஸ் தமிழ்நெஞ்சம் இதழ் மற்றும் இணையத்தின் ஆசிரியர் அமின் வழங்கியிருக்கிறார். ''சொல்லின்பம் மந்திரம்போல வேண்டுமென்று கூறும் பாரதிதமக்குத்தொழிலே கவிதையென்றும், இமைப்பொழுதும் சோராமலிருப்பேன் என்றும் முழுக்கமிடுகிறான். வலைக்குள் மலர்ந்த வனப்பும் அப்படித்தான்'' என்று பாவேந்தரின் பாவடிக்களுக்கு விளக்கம் கூறி ''இவைகள் கவிதைக் கீற்றுக்களின் கட்டல்ல. காலத்தின் கண்ணாடி'' என்று அடித்துக் கூறுகின்றார் ஆசிரியர் அமின்.

நூலாசிரியர் கவிஞர் பாவேந்தல் பாறூக் தன்னுரையில், இந்நூலுப்பெறக் காரணியாய் அமைந்த விடயங்களை தொகுத்தளித்துள்ளார். நூலின் பின் அட்டையில் சந்தக்கவி கிண்ணியா அமீர் அலி நெஞ்சம் நிறைந்த பிரார்த்தனைகளோடு இவ்வாறு தருகிறார்.

''மனித்தமிழ் யாப்பியல்
மாறா மரபில்
தனித்துவம் காத்துத்
தரும்பா – இனித்திடப்
பாலமுனை பாறூக்நம்
பாவேந்தல் பாநூற்கள்
ஆழமெனக் கண்டோம் அவை!''

என பாலமுனை பாறூக்கின் கவியார்வத்தை புகழாரமாக்கி சந்தக்கவியெடுத்து சாத்துணையாக்கியிருக்கிறார்.

மொத்தத்தில் வனப்புக்குள் இருந்து விடுபடுவதென்பது முடியாமல் இருக்கிறது. வலைக்குள் மலர்ந்த வனப்பு அல்லவா பாறூக்கின் கவிதைகள். இந்நூல் காலத்தின் கோலத்தை படம்பிடித்துக் காண்பிக்கிறது. யதார்த்தத்தை துலாபரமிடுகிறது. வாசித்துப் பாருங்கள்.

வெளியீடு :
பர்ஹாத் வெளியீட்டகம் - பாலமுனை
விலை :
320 இலங்கை ரூபாய்

தொடரும் இரு பக்கங்கள்

வலைக்குள் மலர்ந்த வனப்பு

நூல் வெளியீட்டுவிழா

நிழற்படங்கள்

பிரதம அதிதி அல்ஹாஜ் ஏஎல்எம் அதாவுல்லா தலைவர் தேசிய காங்கிரஸ் அவர்களோடு நூலாசிரியர் வரவேற்கப்படுதல்.

நூல் வழங்கல் பிரதம அதிதிக்கு

நூலாசிரியருக்கு பொன்னாடை கௌரவிப்பு

கவிநுட்பம் பாயிஷா நௌபல் நூல்பெறுகிறார்

நாட்டார் பாடல் பாடிய பாத்திமா நுஹா எழுகவிஜெலீலின் மகள் கௌரவிக்கப்படுகிறார்

பாலமுனை ஜும்ஆ பள்ளிவாசல் தலைவர் எம்.ஏ.எம் அன்ஸார் கிழக்கு மாகாண எதிர்க்கட்சி தலைவர் எம்எஸ் உதுமாலெவ்வையிடமிருந்து நூல் பெறுகிறார்.

முன்னாள் இராஜாங்க அமைச்சர் எமரீ ஹசன்அலி பிரதி பெறல்

பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம் ஹனிபா பிரதி பெறல்.

பிரதேச செயலாளர் ரீஜே அதிசயராஜ் பிரதி பெறல்

விக்டர் ஐவன் பிரதி பெறல்

முன்னாள் தவிசாளர் அட்டாளைச்சேனை சட்டத்தரணி எம்.ஏ.அன்சில் சிறப்பு பிரதி பெறுதல்

முனை மருதவன் அல்ஹாஜ் எம்.எச்.எம்.இப்றாகீம் (சமூகச் சிந்தனயாளர்) முதல் பிரதி பெறுதல்.

விக்டர் ஐவன்

பேராசிரியர் கலாநிதி செ யோகராசா

திறனாய்வாளர் எம் அப்துல் றசாக்

பேராசிரியர் கலாநிதி றமீஸ் அப்துல்லா

மூத்த கவிஞர் மு. சடாட்சரன்

மக்கள்கவிஞர் எழுகவி ஜெலீல்

வலைக்குள் மலர்ந்த வனப்பு

நூல் வெளியீட்டுவிழா

தாய்மை

சத்யா ஸ்ரீராம்

“என்னங்க இந்த வீட்ல ஒண்ணு நான் இருக்கும் இல்ல உங்க அம்மா இருக்கணும் யாருனு நீங்களே முடிவு பண்ணிக்கங்க”

“என்ன மகா என்ன பண்ணுச்சி அந்த கிழவிஞ் நீ ஏன் டென்சனாகுற...”

”எனக்கு பிடிக்கல அவ்வளோதான்... சீக்கிரம் நானா அவங்களானு முடிவெடுங்க...”

”நான் இதுக்கொரு முடிவு கட்றேன்ஞ் நீ கிளம்பு செல்லம் நாம சினிமாவுக்கு போய்ட்டு அப்படியே ஒரு நல்ல ஓட்டலுக்கு போய் நைட் டின்னர் சாப்பிட்டு வந்துடலாம் “என்று அவளை அணைத்தாவாறே சொன்னான் மகேஷ்!

***

மறுநாள் காலை...

”அம்மா நீ சீக்கிரம் கிளம்புமா”

”எங்கடா மகேஷ்???”

”உன்ன ஹோம்ல சேர்த்துடுறேன் மாஞ் அங்க உனக்கு எல்லா வசதியும் கிடைக்கும்ஞ் உன்னபோல நிறைய பேர் இருப்பாங்க அவங்க கூட நீ சந்தோசமா இருக்கலாம் மா...”

”மகேஷ் எனக்கு இங்க என் பேரக்குழந்தைங்க கூட இருக்கறதுதான்டா சந்தோசம்ஞ் உங்கப்பா சாகும்போது உனக்கு வயசு எட்டு.. உன்ன வளர்க்க நான் பட்ட கஷ்டம் சொல்லி புரியாதுஞ்

எல்லா கஷ்டமும் தீர்ந்து இப்போதான் நான் பேரக்குழந்தைங்க கூட கொஞ்சம் சந்தோசமா இருக்கேன்டாஞ் என் கடைசி காலத்த இங்கயே கழிச்சிட்டு போயிடுறேன்டா... ”

”உன்ன இப்போ விலக்கம்லாம் கேக்கல நான் உயிர வாங்காம கிளம்பு “என்று கொஞ்சம் அதட்டல் தோனியில் மகேஷ் சொல்ல கலங்கி நின்றாள் மரகதம்!

***

இரண்டு மாதங்கள் உருண்டோடின...

மகேசும் மகாவும் கடைத்தெருவுக்கு சென்று திரும்பும் வேளையில்ஞ் எதிரே வந்த லாரி மோதியதில் இருவரும் தூக்கி வீசப்பட மகேஷ் சிறு காயத்துடன் தப்பியிருந்தான்.

மகாவிற்கு பலத்த அடிபட்டு சுகம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தாள்!

***

“டாக்டர் என் மனைவி எப்படியிருக்காங்க டாக்டர்... ”

Icu வில் இருந்து வெளியேறிய டாக்டரிடம் அழுகுரலில் கேட்டான் மகேஷ்!

”உயிருக்கு எந்த ஆபத்தும் இல்ல... ஆக்ஸிடன்ட்ல சிதறின சில கண்ணாடி துண்டுகள் அவங்க விழித்திரைய பலமா கிழிச்சிருக்குஞ் அவங்களுக்கு பார்வை வர வாய்ப்பில்லை.”

”அய்யோ டாக்டர் மகாவுக்கு கண்பார்வை கிடைக்க ஒண்ணுமே பண்ண முடியாதா?”

”ஒரு வழியிருக்கு இறந்தவங்க யாரோட கண்ணையாவது அவங்களுக்கு உடனே பொருத்தினா பார்வை கிடைக்க வாய்ப்பிருக்குஞ் நாங்க ஐ பேங்க்ல சொல்லி யிருக்கோம் நீங்களும் உங்க சைட்ல ட்ரை பண்ணுங்கஞ் ” என்று சொல்லி நடந்த டாக்டரை கலங்கும் கண்களோடு பார்த்து கொண்டிருந்த மகேசின் சொல்போன் சிணுங்கியது!

மரகதம் இருக்கும் ஹோம் நம்பர் திரையில் வர... ‘நானே கடுப்புல இருக்கேன் இந்த கிழவி வேற பேரனை பார்க்கணும் பேசனும்னு உயிர வாங்குது சே சனியன கை கருவி விட்டாலும் நம்மள விடாது போல’ என்று முணுமுணுத்துக்கொண்டே மொபைலை சுவிட்ச் ஆஃப் செய்தான் மகேஷ்!

***

ஒரு மணிநேரம் கழித்து டாக்டர் வேகமாய் மகேஷிடம் வந்து...

“மகேஷ் யூ ஆர் சோ லக்கி... உங்க மனைவிக்கு கண் கிடைச்சிடுச்சி... இப்போவே ஆபரேஷன் செஞ்சிடலாம்... நீங்க நர்ஸ்கிட்ட கேட்டு பார்மாலிட்டிஸ்லாம் முடிச்சிடுங்க”

”ரொம்ப நன்றி டாக்டர்... ரொம்ப நன்றி” டாக்டரின் கைகளை பிடித்து கண்ணீர் விட்டான் மகேஷ்!

***

மூன்று மணிநேரம் கழித்து ஆபரேஷன் தியேட்டரிலிருந்து வெளியே வந்தார் டாக்டர்.

”டாக்டர் என் மனைவி எப்படியிருக்காங்க”

”ஆபரேஷன் நல்லபடியா முடிந்தது மகேஷ்ஞ் இன்னும் ஏழுநாள் கழித்து கட்டு பிரிச்சிடலாம்... அவங்க மயக்கம் தெளிய ரெண்டு மணி நேரமாகும் அதுக்கப்புறம் நீங்க போய் அவங்கள பாருங்க... ”

***

மகா மயக்கம் தெளிந்து கட்டிலில் படுத்திருந்தாள்.

”மகா உனக்கு ஒண்ணுமில்ல மகா நிச்சயம் பார்வை திரும்பிடும்னு டாக்டர் சொல்லிருக்காங்க...”

''என்னையா சொல்ற.. ஒன் பொண்டாட்டி ஒனக்கு துரோகம் பண்றாளா...?''

''ஆமாங்க... நேத்து நைட்டு ஃபுல்லா வீட்டுக்கு வரல... கேட்டா அவ தங்கச்சிகூட இருந்தேன்னு சொல்றா...''

''சரி... இது எப்புடியா துரோகம் ஆவும்...''

''அட... அந்த நைட்டு அவ தங்கச்சி கூட நானுள இருந்தேனுங்க...''

.
.
.

''எடு செருப்ப...''

"ம்ம்ம்... நாம அத்தைய தனியா தவிக்க விட்ட பாவமோ என்னவோ இப்படி நடந்துடுச்சி...

திரும்ப அவங்கள கூப்பிட்டு வந்துடுங்க நம்ம கூடவே வச்சுக்கலாம். நான் கட்டு பிரிச்சி முதல்ல பார்க்கறது அவங்க முகமாத்தான் இருக்கணும்...!"

"சரி மகா காலையிலே அம்மா போன் பண்ணங்கஞ் சன்டே நான் அவங்கள பார்க்க போகும் போதே பேரக்குழந்தைய பார்க்கணும் போல இருக்குனு கேட்டாங்கஞ். அதுக்குதான் போன் பண்ணி தொல்ல கொடுக்கறாங்கனு நான் சுவிட்ச் ஆஃப் பண்ணிட்டேன் இதோ இப்பவே அம்மாவுக்கு போன் பண்ணி கிளம்பி ரெடியா இருக்க சொல்லிடுறேன் மகா..."

***

மகேஷ் ஹோம் க்கு போன் பண்ண மறுமுனையில் அழைப்பு ஏற்கப்பட்டது!

"ஹலோ மேடம் நான் மரகதம் அம்மாவோட மகன் பேசறேன் அவங்ககிட்ட கொஞ்சம் பேசணும்! "

"என்ன சார் இப்படி பண்ணிட்டிங்களே... படிச்சவங்கதானே நீங்க காலையில அவங்களுக்கு ஹார்ட் அட்டாக் வந்துடுச்சிஞ் கடைசியா மகனையும் பேரனையும் பார்க்கணும்னு சொன்னாங்க... உங்களுக்கு போன் பண்ணா கட் பண்ணிட்டு சுவிட்ச் ஆஃப் பண்ணிட்டிங்க. அவங்க மரணத்தோட போராடி உயிர விட்டாங்க. அவங்க கடைசி ஆசைய கூட நிறைவேற்றாத நீங்கலாம் என்ன மனுசங்களோ.

அப்புறம் ஒரு விசயம் எங்க ஹோம்ல யாராச்சும் இறந்துட்டா அவங்க கண்களை தானமா கொடுக்கறது பழக்கம். உங்களுக்கு போன் பண்ணா நீங்க எடுக்கல அதனால நாங்களா முடிவு பண்ணி கண்ண தானமா கொடுத்துட்டோம்.

உங்க அம்மா உயிரோட இருக்கும் போது உங்கள பார்க்க ஆசப்பட்டாங்கஞ் அவங்க கண் சுகம் ஆஸ்பிட்டல்ல ஒரு லேடிக்கு வச்சிருக்காங்க ஒரு வாரம் கழிச்சி அவங்க கண்ணையாவது போய் பாருங்க அவங்க ஆத்மா நிம்மதியாகும்!"

போனை காதிலிருந்து தரையில் தவறவிட்டு அம்மா... என்று அழுதபடியே ஓடி மருத்துவமனையின் அறிக்கையை தேடி பிடித்து பார்த்தவன் அதிர்ந்தான்.

அவள் மனைவி மகாவிற்கு கண்தானம் கொடுத்தவர் என்னும் அறிக்கையில் மரகதம் என்றிருந்தது!

***

இறந்தும் நம்மை வாழ வைப்பது அன்னை மட்டுமே!

முகத்தில் வரிகள் விழுந்ததால்...
முகவரி மாறிப்போனதோ...
முதியோர் இல்லத்திற்கு!
மனைவி சொல்லே மந்திரமாம்...
சில காமப் பேய் பிடித்தவனுக்கு!

தூக்கம் தொலைத்த இரவுகள்

பெண்ணியம் செல்வகுமாரி

கடைசியாக இரவு 9 மணி அதிகபட்சம் 10 மணிக்குள் படுத்துத் தூங்கியது எப்போது? என உங்களுக்கு நினைவிருக்கிறதா?

கடந்த 20 ஆண்டுகளில் நாம் தூங்கச்செல்லும் நேரத்தின் சராசரி அளவு தள்ளிப் போய்க்கொண்டே இருப்பதைக் கவனித்து இருக்கிறீர்களா?

8:00 மணிக்குள் இரவு உணவு முடித்து, 8:30க்கு வெளிச்சம் அணைத்து, பேசிக்கொண்டே படுக்கையில் விழுந்தால், 9 மணிக்குள் உறங்கிப்போவோம்.

அது ஒரு காலம்.

9 மணித் தூக்கம் என்பது, 10 மணியாகி, நள்ளிரவாகி, இப்போது அதிகாலை வரை வந்துவிட்டது. அதிகாலை 3 மணி, 4 மணி வரைகூட விழித்திருக்கிறார்கள்.

இரவு வேலையின் காரணமாக கண் விழிப்பது, என்றோ ஒருநாள் தூக்கம் வராமல் இப்படி ஆவது,என்பது எல்லாம் தனி.

எந்த உடனடி காரணமும் இல்லாமல் தொடர்ந்து இரவுகளில் கண் விழிப்போர் பெருகிக்கொண்டிருக்கின்றனர்.

நான் பார்த்த உலகம்

நான் பார்த்த
உலகம்,
அழகாயுள்ளது அளவாயில்லை
சாக்கடையாய் நாகரிகம்
நிறைந்ததால்.

அன்பாய் உள்ளது
இந்த உலகம்,
அதிகமாய் பணமிருந்த
போது.

உறவாய் உள்ளது
இந்த உலகம்,
ஊனமாய் பிறக்காதிருந்த போது.

சுவணமாயுள்ளது
இந்த உலகம்,
அரக்கனாய் பிறந்த மானிடங்கள் நடுவில்.

ஒற்றுமையாய் உள்ளது
இந்த உலகம்,
வேற்றுமை பார்க்கும் மானிடங்கள்
நடுவில்.

உறவுகள் என்று ஓடும்
இந்த உலகம்,
உறவாட கூச்சம் பார்க்கும்
வேளை இன்று.

என்னடா உலகம்
இது,
காலம் மறந்து
கால்கள் உடைந்து
உயிர்கள் மாய்த்து
கிடக்கின்றது இன்று.

நான் பார்த்த உலகம்
இதுவடா.?
நீ பார்த்த உலகம்
எதுவடா.?
குறுடா பதில் கூறடா.?
நீ பார்த்த உலகம்
எது என்று.?

பொத்துவில் அஜ்மல்கான்
இலங்கை

இதன் விளைவுதான், இந்த 20 ஆண்டுகளில் புதிது புதிதாகப் பெருகிப் பெருக்கெடுக்கும் நோய்கள்.

இரவுத் தூக்கம் தள்ளிப் போவதற்கும், நோய்களின் வருகைக்கும் நேரடித் தொடர்பு உண்டு.

தவறான வாழ்வியல்முறைகளால் ஏற்படும் உடல் பருமன், சர்க்கரை நோய், புற்றுநோய், இதயநோய் பக்கவாத நோய், போன்றவற்றால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருகிறது.

நம் இரவுத் தூக்கம் எதனால் தள்ளிப் போகிறது? நமக்கு ஏன் தூக்கம் வருவதில்லை?

இதற்கு `நமது உடல் பிரச்னைகள், மனக் கவலைகள்தான் காரணம்' என நினைக்கிறோம். இது முழு உண்மை அல்ல.

உண்மையில் நாம் உறக்கத்தைத் தள்ளிப்போடும் ஒவ்வொரு நிமிடத்திலும், பல நிறுவனங்கள் பல கோடிகளுக்கு வருமானம் பார்க்க ஆரம்பித்து விட்டன.

இரவுச் சந்தையில்தான் இப்போது நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு `கோடி'கள் புரள்கின்றன.

இரவுச் சந்தை என்பது, முழுக்க முழுக்க டிஜிட்டல் சந்தை. டிஜிட்டல் பொருட்களை நாம் சரியாக அணுகத் தெரியாமல் தடுமாறுவதையே வியாபாரம் ஆக்கிவருகிறார்கள்.

அதிகரித்துவரும் `காஸ்ட் ஆஃப் லிவிங்' மற்றும் குடும்பக் கடமைகளைச் சமாளிக்க, தனக்குப் பிடிக்காத வேலைகளையும் செய்தாக வேண்டும்.

அதுவும் தொழிலாளர் சட்டத்தை மதித்து 8 மணி நேர வேலை எல்லாம் கிடையாது. குறைந்தது 10 மணி நேரம் உழைக்க வேண்டும்.

அதில் டார்கெட்டை எட்டிப்பிடிக்க வேண்டும்.

மனஉளைச்சல் தரும் இந்த வேலையைச் செய்து விட்டு, வெளியே வந்தால் கடும் போக்குவரத்து நெரிசலில் சிக்க வேண்டும்.

சோர்வுடன் வீட்டுக்கு வந்து விழுந்ததுமே டி.வியை ஆன் செய்து விடுகிறார்கள்.

அந்த மாய உலகத்தில் விரியும் வண்ண வண்ணக் காட்சிகளில் மனம் மயங்குகின்றனர்.

இளம்வயதினர் மட்டுமின்றி, பலரும் ஸ்மார்ட்போனில்: ஃபேஸ்புக், வாட்ஸ்அப் என மூழ்க ஆரம்பித்துவிடுகிறார்கள்.

சமூக வலை தளங்கள் எனும் உலகத்துக்குச் சென்றுவிட்டால் அங்கு அதற்கான வேடம் தரித்து பலர் பிஸியாகிவிடுகிறார்கள்.

முன்னர் எல்லாம் இரவு உணவு முடித்ததும் திண்ணையில் ஓரிரு மணி நேரம் நண்பர்களோடு உட்கார்ந்து பேசிவிட்டே உறங்கச் செல்வார்கள்.

வீட்டுத் திண்ணை வாட்ஸ்அப் ஆனது. வாட்ஸ்அப் உரையாடலில் நேரம் போவதே தெரிவதில்லை.

சொந்த வீட்டில் இருப்பவர்களுடன்கூட, வீட்டில் இருந்துகொண்டே சமூக வலைதளங் களின் வழியே தொடர்புகொள்பவர்களும் இருக்கிறார்கள்.

இது உண்மை.

தினமும் நள்ளிரவைத் தாண்டிய சாட்டிங்குக்குப் பிறகு `குட்மார்னிங்' சொல்லி விட்டுத்தான் படுக்கைக்குச் செல்கிறார்கள்.

இரவு உறங்கிக் கொண்டிருக்கும்போது திடீரென எழுந்து, `ஃபேஸ்புக்கில் போட்ட போட்டோவுக்கு எத்தனை லைக்ஸ்? வாட்ஸ்அப்பில் மெசேஜ் வந்திருக்கிறதா?' என அடிக்கடி செக் செய்து கொண்டே இருப்பதை `கம்பல்சிவ் பிஹேவியர்' எனச் சொல்லும் ஒருவகையான மன நலப் பிரச்னை



நள்ளிரவு
ஆடி அசைகிறது
ஊர்வலத்தில் சாமி!

தூளியில் ஆட்டியும்
உறங்கவில்லை
பொம்மை !

பாழடைந்த வீடு
பழுதாகவில்லை
பழைய நினைவு !

ஆயிரங்காலத்து பயிர்
அறுவடையாகவில்லை
விவாகரத்து !

பாட்டு சத்தம்
ஆடமுடியவில்லை
தேசியகீதம் !

மு. கௌந்தி

என்றும், `கண்டிஷனல் இன்சோம்னியா' எனும் தூக்கமின்மை நோய் என்றும் மருத்துவர்கள் சொல்கிறார்கள்.

பலர் தினமும் காலையில் விழித்து எழுந்ததும் செய்யும் முதல் வேலை என்ன தெரியுமா?

தலையணை அருகே இருக்கும் மொபைலை எடுத்து இன்டர்நெட்டை ஆன் செய்து, வாட்ஸ்அப்பில் ஏதேனும் மெசேஜ் வந்திருக்கிறதா? எனப் பார்ப்பதுதான்.

நாம் எவ்வளவு தூரம் சமூக வலைதளங்களுக்கு அடிமையாகி வருகிறோம் என்பதை உடனடியாக உணரவேண்டிய தருணம் இது.

இரவுத் தூக்கம் தடைபடுவதால் ஏற்படும் பிரச்னைகள்:

நமது உடலுக்குள் மன சுழற்சிக் கடிகாரம் இருக்கிறது. பொதுவாக சூரிய உதயத்தின்போது எழுந்து உற்சாகமாக வேலைசெய்வதும், சூரியன் மறைந்த பின்னர் இரவு உணவை முடித்துவிட்டு உறங்கச் செல்வதும்தான் இயற்கையோடு இனைந்த வாழ்வு.

ஏன் நாம் சூரிய வெளிச்சத்தில் மட்டும் இயங்க வேண்டும் என்பதற்கு அறிவியல் விளக்கமும் உண்டு.

சூரியன் மறைந்த பிறகு, இருட்டு நேரத்தில்தான் மேலெட்டோனின்யு முதலான பல ஹார்மோன்கள் நமது உடலில் சீராகச் சுரக்கும்.

நாம் இரவு நேரத்தில் உடலுக்கு ஓய்வு தந்து உறங்கும் போதுதான் மேலெட்டபாலிசம்மே எனும் வளர் சிதை மாற்றம் உடலில் சீராக நடக்கும்.

நமது உடல் வளர்ச்சிக்குத் தேவையான குரோத் ஹார்மோன், பெண்கள் மற்றும் ஆண்களுக்கான, ஈஸ்ட்ரோஜன், டெஸ்டோஸ்டீரான் போன்ற பிரத்யேக செக்ஸ் ஹார் மோன்கள் சமச்சீராகச் சுரக்கும்.

முறையற்ற இரவுத் தூக்கத்தால் ஹார்மோன்கள் சீராக உற்பத்தி செய்யப் படாமல் பல நோய்கள் வருவதற்கான வாய்ப்புகள் உண்டு.

கடந்த சில வருடங்களாக குழந்தைப் பேறின்மை பிரச்னை இளம் தம்பதிகளிடம் அதிகரித்துவருகிறது.

ஒழுங்கற்ற தூக்கத்தால்: பயம், பதற்றம், சோர்வு ஆகியவை வருகின்றன.

மனநலன் சார்ந்த பல பிரச்னைகள் வருவதற்கும் இதுதான் காரணம்.

இரவு நெடுநேரம் கழித்து உறங்குவதாலும், போதுமான நேரம் தூங்காததாலும், ஆழ்நிலை தூக்கம் அடையாமல் மேம் போக்காகத் தூங்குவதாலும், மெள்ள மெள்ள உடற்பருமன், சர்க்கரை நோய், குறிப்பாக ரத்த அழுத்தம், ஸ்ட்ரோக் ஆகியவை வருவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன.

எல்லோராலும் இயல்பாக உடனடியாகத் தூங்கிவிட முடிவதில்லை.

ஒவ்வொருவருக்கும் தூக்கம் தடைபடுவதற்கு வெவ்வேறு காரணிகள் இருக்கின்றன.

பொதுவாக, தூக்கத்தைப் பாதிக்கும் காரணி வெளிச்சம்தான்.

இருள்தான் மனிதர்களுக்குத் தூக்கத்தைத் தூண்டும்.

அதனால்தான் வெளிச்சத்தை அணைத்து விட்டுத் தூங்குகிறோம்.

சமீப ஆண்டுகளாக இரவிலும் வெளிச்சம் கண்களைப் பறிக்கிறது. வீதிகளில் மட்டும் அல்ல, வீட்டுக்குள்ளும் இரவு வெளிச்சம் அளவுக்கு அதிகமாக அதிகரித்துவிட்டது.

ஒரு காலத்தில் மின்சார விளக்கு மட்டும்தான் நமக்கு இரவு வெளிச்சம். பிறகு டி.வி வந்தது, கம்ப்யூட்டர், செல்போன், லேப்டாப், டேப்லெட் எல்லாம் வந்துவிட்டன.

அனைத்தும் அதிஉயர் வெளிச்சத்தை உமிழ்கின்றன. இதனால் நமது தூக்கம் தள்ளிப்போகிறது.

மொபைல் வெளிச்சம் தூக்கத்துக்குக் கடும் எதிரி.

பலர் அறை விளக்குகளை அணைத்துவிட்டு மொபைலில் நோண்ட ஆரம்பித்து விடுகிறார்கள். கண்களுக்கு அருகில் வைத்து மொபைலைப் பயன்படுத்தும் போது, அந்த வெளிச்சம் நமது கண்களையும் மூளையையும் பாதிக்கும். தூக்கத்தைத் தாமதப்படுத்தும். ஒவ்வொருவருக்கும் வேலை நேரம் என்பது வித்தியாசப்படும். வேலைக்கு ஏற்ப தங்களது வாழ்வியல் முறையை ஆரோக்கியமான வகையில் மாற்றிக்கொண்டால் பிரச்னை

வராது.

பொதுவாக இரவு 9 மணிக்குள் உறங்குவதும். காலை ஐந்து மணிக்குள் எழுவதும்தான் சிறந்தது.

அதிகத் தூக்கம் எப்படி ஆபத்தோ, அதுபோல குறைந்த தூக்கமும் ஆபத்தானது. இரவு தாமதமாக உறங்கினாலும் காலையில் அலாரம் வைத்து சீக்கிரமாக எழுந்துவிடுவது தவறு. அனைவருக்கும் ஆறு மணி முதல் எட்டு மணி நேரத் தூக்கம் அவசியம்.

நாம் அவசியம் நன்றாகத் தூங்கியே ஆக வேண்டும் என்ற நிலைமைக்கு வந்துவிட்டோம்.

நேர மேலாண்மையைச் சரியாகக் கையாளத் தெரியாதவர்கள் தடுமாறுகிறார்கள்.

நண்பர்களுக்கு,

மொபைலுக்கு, டி.விக்கு என நேரம் ஒதுக்குவதில் தவறு இல்லை. உங்கள் உடலுக்கும் கொஞ்சம் நேரம் ஒதுக்குங்கள்.

கடைசி காலத்தில்: ஆரோக்கியம் மிக மிக முக்கியம்.

ஹைக்கூ

♦

சண்டையிட்ட பூனைகளை
ஏமாற்றிய குரங்காய்
அரசியல்!

♦

ஒற்றுமை இல்லையெனில்
இழப்புதான்
குரங்கு அப்பம் கதை!

♦

உணர்த்தியது
ஏமாற்றினால் ஏமாறுவாய்
பாட்டி வடை கதை!

♦

ஒன்று செய்தால்
மற்றவையும் செய்யும்
குரங்கு குல்லாக் கதை!

♦

உணர்த்தியது
நேர்மைக்கு மதிப்பு உண்டு
கோடாரிக் கதை!

♦

உணர்த்தியது
முயற்சி திருவினையாக்கும்
காகம் தண்ணீர் கதை!

♦

மகிழ்ந்தன
மரங்களும்
கோடை மழை!

♦

சூதாடிவிடும்
வாழ்க்கையை
சூதாட்டம்!

♦

மாட்டிடம் காட்டும் பாசத்தை
கொஞ்சம் காட்டுங்கள்
மனிதனிடம்!

♦

விளம்பரத்தில் போய்
ஆறு அறிவாம்
இரும்புக்கம்பிக்கு!

♦

தூக்கம்
நிரந்தரமானால்
துக்கம்!

♦

துக்கம்
துப்பாக்கிக்குண்டுகள் பரிசு
உழவர்களுக்கு!

♦

உத்திரவாதமில்லை
உயிருக்கு
மீனவர்களுக்கு!

♦

தீர்வு அல்ல
தீங்கு
வன்முறை!

♦

ஒழுங்கு கற்பித்தன
வரிசையாகச் செல்ல
எறும்புகள்!

♦

நாடுகள் கடந்தன
கடவுச்சீட்டுகள் இன்றி
பறவைகள்!

♦

அறிந்தது முகரந்ததும்
பசுவின் கர்ப்பம்
தீண்டவில்லை காளை!

♦

பெயரால் மட்டுமல்ல
உண்மையில் பெரியார்
பெரியார்!

கவிஞர் இரா. இரவி

சமீரா

ஆர். விஜயலட்சுமி

இறுதிப்பகுதி

ஆசிட் ஊற்றியது யாராக இருக்கும் என்று ராஜ்குமார் குழம்பினான்.

சந்தேகம் நபர் 1: ராஜ்குமார்

ராஜ்குமார் சமீரா மீது கோபமாக இருந்தாலும் சமீரா அபியை காதலித்ததை தன்னிடம் மறைக்காமல் சொன்னவள். தவறு எண்ணவோ தன்மீதுதான் என்று விலகி விட்டான்.

சந்தேகம் நபர் : 2 அபி

மூன்றாண்டுகள் தன்னை காதலித்து , இருவர் வீட்டிற்கும் தெரிந்து பிரச்சனை ஆனபின்னும் படிப்பை முடித்துவிட்டு வருகிறேன், காத்திரு என்று சொல்லி அனுப்பியதையும் கேட்காமல், சமீரா ராஜ்குமாரை காதலித்ததால் கோபம் இருந்தது. ஆனால் வீட்டில் சமீராவை திருமணம் செய்து கொள்ள கடைசிவரை யாரும் ஒத்துக்கொள்ளவில்லை. சமீரா வேண்டுமென்றால் கோடிக்கணக்கான சொத்தில் உனக்கு ஒரு நயா பைசாக் கூட கொடுக்கமுடியாது. வீட்டைவிட்டு வெளியே போ என்று அப்பாவும், பெரியப்பாவும் சொன்னதை சமீராவிடம் மறைத்து, தன்னை ஏமாற்றிய அவளை பழிவாங்க நினைத்தானே தவிர ஆசிட் ஊற்றவில்லை.

சந்தேகம் நபர் 3: ராதா

அண்ணன் மீது அளவற்ற பாசம் இருந்ததாலும்,குடும்பத்தோடு அனைவரையும் ஏமாற்றிய சமீராவை பற்றி அவர்கள் வீட்டிற்கு தெரியப்படுத்த நினைத்தாளே தவிர. ஆசிட் ஊற்றவில்லை.

சந்தேகம் நபர் 4: விலாசினி

அபி வந்து அழுவதை உண்மை என்று நம்பினாள். LKG யிலிருந்து சமீராவும், விலாசினியும் தோழிகள். சமீரா அபிக்கு துரோகம் செய்ததும், ராஜ்குமாரை ஏமாற்றியதும் விலாசினிக்கு கோபத்தையும், சமீராமேல் வெறுப்பையும் ஏற்படுத்தியது. ஆனாலும் தோழியாக சமீராவுக்கு அறிவுரை வழங்கி திருத்த நினைத்தாளே தவிர ஆசிட் ஊற்றவில்லை.

சந்தேகம் நபர் : X

ராஜ்குமாருக்கும், அபிக்கும் அல்வா கொடுத்துவிட்டு, மருத்துவக்கல்லூரியின் டாக்டர் அரவிந்தை திருமணம் செய்துகொள்ளும் நோக்கத்தில் கல்லூரி முடித்த நேரத்திலும் பாட சம்மந்தமாக விளக்கம் கேட்பதுபோல் அவனின் காதலை எளிதில் பெற்றாள். மிகப்பெரிய மருத்துவமனை ஒன்றை நடத்தி வந்த அரவிந்த் சமீராவின் அழகில் மயங்கி நடந்தது ஏதுமே அறியாமல் அவளுக்கு அடிபணிந்தான்.

ஒருநாள் சமீராவை வகுப்பில் காணாமல் லேப் பிற்கு தேடி வரும்போது விலாசினிக்கும், சமீராவிற்கும்நடந்தசண்டையைகேட்கநேர்ந்தது. அதைக் கேட்ட அதிர்ச்சியில் அரவிந்த் உள்ளே வர விலாசினி வெளியேறினாள்.

இப்ப தெரிஞ்சிருக்குமே ஆசிட் ஊற்றியது வேறயாரு. கோபத்தில் மூன்றாவதாக ஏமாற்றப்பட்ட அரவிந்த் அருகில் இருந்த ஆசிட்டை சமீரா முகத்தில் வீசினான். ■

ஏணி

பல வருடங்களுக்குப் பின் அந்த ஆரம்பப் பள்ளிக்கூடத்திற்கு வந்தார் உலகின் தலைசிறந்த மருத்துவரான கதிரேஷன்.

அங்கு சுந்தரலிங்கம் ஆசிரியர்தான் முதன்மையாக நின்று கதிரேஷனை வணங்கினார்.

அவர் தன்னை வணங்குவதை கண்டதும் பதறி அடித்துக்கொண்டு ஓடினார் உலகின் தலைசிறந்த மருத்துவரான கதிரேஷன்.

'ஐயா' என்னங்க ஐயா இது நீங்கபோய் என்னை வணங்குவதா? நான் தான் ஐயா உங்ககிட்ட படிச்ச கதிரேசன்; நீங்க அடிக்கடி சொல்லுவீங்க பணம் சம்பாதிப்பது மட்டும் வாழ்க்கை அல்ல பிறருக்கு கொடுத்து வாழ்வது தான் வாழ்க்கைனு சொல்லுவீங்க . சில பேர் சொல்வாங்க ஆனா செய்ய மாட்டாங்க கேம்பி ரிட்ஜ்ல வேலை கிடைச்சும் போகாம நான் படிச்ச படிப்பு என் மண்ணுக்கு தான் போகணும்னு சொல்லிட்டு இந்த அரை குறை சம்பளத்துல மன திருப்திக்காக வேலை செய்யுறீங்க. சில அரசு ஆசிரியர்கள் வாங்குற சம்பளத்துக்கு ஒழுங்கா வேலை செய்யுறது இல்லை. ஆனா நீங்க பள்ளி முடிஞ்சதுக்கு அப்புறமும் ஒழுங்கா படிக்காத பிள்ளைங்கள தனியா கவனம் எடுத்து மணிக்கணக்கா சொல்லி தந்து நல்லா படிக்கிற பிள்ளைகளா மாத்துனீங்க. இது மட்டுமா ஐயா, சில பேருக்கிட்டே சொத்து இருக்கும் ஆனா செய்யுறதுக்கு மனசு இருக்காது உங்ககிட்ட ரெண்டு வீடு இருந்தும் இன்னொரு வீட்டை வாடகை விடாம அதை வித்து ஏழை பிள்ளைங்க மேல் படிப்பு படிக்கிறதுக்காக பணம் கொடுத்தீங்க. நீங்க கொடுத்த பணத்தை வச்சு மருத்துவர் ஆன மாணவர்களில் நானும் ஒருவன் ஐயா. நான் வாழுற வாழ்க்கை நீங்க போட்ட பிச்சை என்றார் மருத்துவர் கதிரேஷன்.

அப்படி சொல்லாதீங்க கதிரேஷன் நான் கொடுத்த பணத்தாலே மட்டும் நீங்க நல்ல நிலைமைக்கு வரலை. உங்களுடைய விடாமுயற்சி , திறமை தான் காரணம். நீங்க மேலும் நல்லா வரணும் கதிரேஷன். முடிஞ் சா நீங்க பொறந்த மண்ணுக்கு, உங்களை சார்ந்த சமுதாயத்துக்கு, கஷ்டப் படுற மாணர்வர்களுக்கு ஏதாவது நல்லது செய்யுங்க என்றார் ஆசிரியர் சுந்தரலிங்கம். தற்பொழுது சுந்தரலிங்கம் ஆசிரியர் கஷ்டத்தில் இருந்த போதும் தனக்காக எதுவும் கேட்க வில்லை. கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே ...

தனது ஆசிரியர் சுந்தரலிங்கத்தை நினைத்து கதிரேஷன் மிகவும் பெருமை பட்டான். வாழ்ந்தா சுந்தரலிங்கம் ஐயா மாதிரி வாழ வேண்டும் என மனதுக்குள் சபதம் எடுத்தான் கதிரேஷன்!

இது பீனிக்ஸ் கட்டிய கூடு

வீடு கட்டும் எண்ணம் எப்படி வந்தது எனக்கு?
ஆயிரம் ரூபாய் சம்பளத்தில்[1988] அல்லாடும் நிலையிலும்
தனிக் குடும்பம் கண்ட தவிப்பாலா?
வாடகை வீடுகளில் வதைப்பட்ட வரலாறாலா?
கொட்டும் மழையில் என் கோமேதகவல்லி [மனைவி]
தலை ஒரு பக்கமும், மறுபக்கம் என் தலையும் வைத்து
கயிற்று கட்டிலில் கணன்று கொண்டிருக்க
அடியிலோ சென்றது அலை அலையாய் அடைமழையின் தண்ணீர்.

என் நண்பர் கொடுத்த கோதுமை [இலவசமாய்]
குளிரில் ரத்த நாளங்கள் சுருங்காமல்
எங்கள் வாழ்க்கை வண்டியின்
சக்கர ஆரக்காலாய் திகழ்ந்தது என்றால் மிகையாகாது.
வீடும் கட்டினேன் [2003] கடனில் விழுந்தேன்.

எட்டு வயதில் என் மகள் சொன்னாள்...
வேண்டாம் அப்பா வீடு, விற்று விடுங்கள்...
கடனை தீர்த்து வீணர்களின் வாய்ப் பேச்சை நிறுத்துங்கள்!
புதிய வீடு வைப்போம், அதுவும் சின்னதாய்
நம் மூவர்க்கும் ஏற்றபடி வைப்போம் என்றாள்.

கிருஷ் ராம்தாஸ்

என் சின்னக் குயிலின் சிந்தையில் வந்த வார்த்தை
சோர்வாய் இருந்த என் குருதியில்
கடாரம் கொண்ட சோழனின் வீரத்தை சுருதியாய் சேர்த்தது
விற்ற வீட்டுக்கு பதிலாய் புதிய வீடு கட்டும் எண்ணம் வந்தது.

சின்னக் குழந்தையின் சிறப்பான வார்த்தை
என் உயிரான மனைவியின் ஒப்பில்லா உந்துதல்
விழுந்த என் மனது எழுந்து நின்றது
அதுவும் அழகான ஒரு வீடாய் எழுந்து நின்றது [2011]

நாங்கள் கட்டியது வீடு அல்ல
எத்தனை முறை விழுந்தாலும், மீண்டும் எழும்
பீனிக்ஸ் பறவை கட்டிய கூடு.

பல முறை விழுந்தேன், பல முறை எழுந்தேன்
எத்தனை முறை விழுந்தேனோ அத்தனை முறையும் எழுந்தேன்
விழுவதெல்லாம் எழுவதற்குத்தான் என்ற
பொதிகை கவிஞன் ரமணன் சொன்ன கவிதைக்கிணங்க
நாங்கள் கட்டியது வீடு அல்ல
பீனிக்ஸ் பறவையின் அழகான கூடு.

நல்ல வரன் கிடைக்க வரம் செய்தோமென மகிழ்ந்திருந்த வேளை...!

பெண் நண்பர் ஒருவரின் பெற்றோர்கள் பிரபல மேட்ரிமோனியல் தளங்களில் பதிவு செய்துவிட்டு தங்கள் பெண்ணுக்கு மாப்பிள்ளை தேடி கொண்டிருந்தனர்.

அவரும் அவ்வப்போது Login செய்து தனக்கு வந்துள்ள வரன் விண்ணப்பங்களை ஆய்வு செய்த வண்ணம் இருந்திருக்கிறார்.

அதில் இருந்த ஒரு விண்ணப்பம் பிடித்துப் போக, பெற்றவர்கள் அனுமதியுடன் அதற்கு பதில் அனுப்ப, பதிலுக்கு மிக பணிவாக அசர வைக்கும் ஆங்கிலத்தில் பதில் வர, தொடர்ந்து இணையத்தில் இந்த சம்பாஷணை தொடர்ந்திருக்கிறது.

எதிர்புறம் தன்னை லண்டனில் ஒரு மிகப்பெரிய வேலையில் இருப்பவன் என்றும், பெண் நண்பரை தனக்கும் தன் குடும்பத்திற்கும் மிகவும் பிடித்திருக்கிறது எனவும், ஜாதகமும் பொருந்துகிறது என அடுக்கடுக்காய் அன்புக் கணைகள் தொடுக்க உருகி போன இவர் உரையாடலை வாட்ஸப்பில் வரவேற்று தொலைபேசி அழைப்புகளில் தொடர்ந்திருக்கிறார்.

ஒரு சில நாட்களிலேயே இந்த உரையாடல்கள் காதலாய் மலர, இவரை பார்ப்பதற்காக இவர் பெற்றோர்களை பார்த்து பேசுவதற்காக லண்டனில் இருந்து இந்தியா வருவதாக தெரிவித்தவன், இவருக்காக ஒரு விலையுயர்ந்த நெக்லஸை பரிசாக கொண்டு வருவதாகவும் வாட்ஸ்அப்பில் புகைப்படம் அனுப்ப, ஏற்கனவே லண்டனில் இருந்து மாப்பிள்ளை வர்றார் என அகமகிந்து அவசர கோலத்தில் வீட்டையெல்லாம் ரெடி பண்ணி காத்திருந்த பெற்றோரும் பெண்ணும் இந்த நெக்லஸ் போட்டாவை பார்த்து 'நெக்'குருகி போனார்கள்.

அந்த மாப்பிள்ளை மவராசன் இந்தியா வரும் தினமும் வந்தது, இவர்களும் காத்திருந்தனர்,

ஆனால், சொன்ன நேரத்திற்கு ஆளும்

வரவில்லை, போனும் வரவில்லை.

கால் செய்தாலும் யாரும் எடுக்காததால் முதலில் பதறி போன பெண் பொறுமையிழந்து தொடர்ந்து கால் செய்ய,

பல முயற்சிகளுக்கு பிறகு போனை எடுத்த லண்டன் மாப்பிள்ளை சற்றே கலவர குரலில்

ஹேனி, சம் ப்ராப்ளம் ஹியர், நான் திருப்பி கால் பண்றேன் என வைக்க முயல,

பதறி போன பெண் "என்னடா ஆச்சு சொல்லு, ஐ வில் ஹெல்ப் யூ" என வெள்ளந்தியாய் கேட்க,

இந்த ஒரு வார்த்தைக்காகவே காத்திருந்த லண்டன் லார்டு தன் மோசடி மூட்டையை அவிழ்க்கத் துவங்கினான்,

'மும்பை ஏர்போர்ட் கஸ்டம்ஸ் செக்கிங்கில் இருக்கிறேன் என்றும், விலையுயர்ந்த நெக்லஸ் மற்றும் அதிக அளவில் பவுண்டு பணம் கொண்டு வந்த காரணத்தால் பிடித்து வைத்துக் கொண்டு லஞ்சம் தந்தால் தான் அதை எடுத்து போக அனுமதிப்போம் என கஸ்டம்ஸ் அதிகாரிகள் முரண்டு பிடிப்பதாக தெரிவித்தவன்,

அவர்களுக்கு கொடுப்பதற்கு தன்னிடம்

கேட்டீகளோ...

தண்ணி குடிக்கத்தான்
தலை கவிழ்ந்தேன்...
தடுமாறி விழுவேன்னு
நினைக்கலியே...
கண்ணுமணி குஞ்சுக்
கண்விழிக்காம
வாய்திறந்து கத்துதுகளே
குளத்த ஏரிய காயவிட்டீகளே
குஞ்சுகளின் கதறல் கேட்டீகளோ...

கவிஞர் மு. கீதா

தமிழில் உறைந்து போதல்

ஒருதுளி மழை
போதுமானதாய் இருக்கிறது
நான் நனைந்திட ...
ஆனால்,
இந்த பூமிக்கு தான் அது
போதுமானதாயில்லை!

ச.இராஜ்குமார்
தாதனவலசை.

திரும்பி திரும்பி

ஒரேயொரு நகைச்சுவையை
திரும்பி திரும்பி சொல்ல
சிரிப்பை குறைத்து கொள்ளும்
மனிதன்
என்றோ நடந்த துன்பத்தை
நினைத்து நினைத்து
தினமும்
கவலை கொள்வதேனோ....?

- ஆனந்தன்,
மதுரை

மெழுகின் மொழி

மெழுகும் மொழிக்கொண்டது
மென்மை மேன்மை மொழியே
வியர்வை மணம் வீசும் மொழியே
மெழுகாய் உருகும்
உழைப்பாளி மொழியாம்!

மிசல் ஜான்

சற்றே
விலகி நில்லுங்கள்
எனக்குள் தூங்கும்
மிருகத்தை தட்டி எழுப்பி
என்னுள் பாசாங்கு செய்யும்
மனிதத்தின் விகிதத்தை
கணபொழுதேனும்
கண்டுகொள்கிறேன் ...

மு. கௌந்தி
சென்னை.

இந்திய ரூபாய் எதுவும் இல்லை, அக்கவுண்ட்டில் செலுத்துகிறேன் என்றாலும், வெளிநாட்டு வங்கியில் இருந்து தங்களுக்கு பணம் வந்தால் தங்களுக்கு பிரச்னை என அவர்கள் மறுத்துவிட்டதாகவும் செய்வதறியாமல் நான் இங்கு நிற்கிறேன் என கதற,

அதிர்ந்து போன பெற்றோரும் பெண்ணும்,

''இந்த இந்தியாவே இப்படித்தாங்க, லன்ச் சாப்பிடறதே லஞ்சத்திலதான், நீங்க கவலைப்படாதீங்க மாப்ள, போன அந்த ஆஃபிஸர் கிட்ட கொடுங்க, நாங்க பேசிக்கிறோம்" என சொல்ல,

போனை வாங்கி சலித்த குரலில் பேசிய ஆபிசர், சோர் கஸ்டம்ஸ் ஆக்ட் படி ஆண் 50000 பெருமானம் உள்ள நகை. பொண்ணுங்கன்னா 100000 பெருமானம் உள்ள நகை தான் வெளிநாட்லருந்து கொண்டு வரலாம்,

உங்க மாப்பிள்ளை வச்சிருக்கிற நெக்லஸ் மட்டும் ஒரு ஆறு லட்சம் வரும்,

அது போக பவுண்டு பணம் மட்டும் நம்ம ரூபா மதிப்புக்கு ஒரு 30 லட்சம் இருக்கும் சார்,

கஷ்டம் சார், லா படி இதெல்லாம் சரி வராது, பெனால்டி போட்டா எகிறிடும்,

அதான் ஒரு 5 லட்சம் பார்த்து செய்ய சொல்லுங்க, விட்ரலாம், என்ன சொல்றீங்க?" என போனில் பேரத்தை ஆரம்பிக்க, இடையில் மறித்து போனை வாங்கிய லண்டன் மாப்பிள்ளை,

"அங்கிள், இவங்க பொய் சொல்றாங்க நான் இந்தியன் கஸ்டம்ஸ் ஆக்ட் படிச்சுட்டு தான் பணம் கொண்டு வந்தேன்,

வெளிநாட்டு பணம் கொண்டு வர லிமிட் கிடையாது, கஸ்டம்ஸ்ல ஜஸ்ட் டிகிளேர் தான் பண்ணனும்,

இவங்க வேணும்னே பண்றாங்க, டோன்ட் பே தெம் அங்கிள், தீஸ் ஆஃபீசர்ஸ் ஆர் சீட்டிங்" என பொய்க்கண்ணீர் வடிக்க,

மோப்பிள்ளை இங்க எல்லாம் இப்படித்தான், நாங்க பாத்துக்கிறோம்,

நீங்க போனை ஆபிசர் கிட்ட கொடுங்க என பெண்ணின் பெற்றோர் சொல்லி யிருக்கின்றனர்,

பொய்க் கோபத்துடன் போனை வாங்கிய ஆபிசர் சோர், "இதெல்லாம் வேலைக்காவாது, டிபார்ட்மெண்ட்டுக்கு தெரிஞ்சா பிரச்சனை ஆயிரும்,

நீங்க ஒழுக்கமா பெனால்டி கட்டி எடுத்துட்டுப் போக சொல்லுங்க" என எகிற,

"சோர், சாரி சார்.. உங்க அக்கவுண்ட் நம்பர் சொல்லுங்க, இன்னொரு அரை மணிநேரத்தில் பணம் அனுப்புறோம்,

அவரை விட்டுருங்க சார் ப்ளீஸ், பொண்ணை பார்க்க மொத மொதல்ல வாறார்,

அபசகுனமா நினைச்சுக்க போறார், பார்த்து செய்யுங்க" என கெஞ்ச, "சேரி பெரியவரே, கல்யாண மேட்டர், அதனால ஒத்துக்குறோம், இந்த அக்கவுண்டுக்கு பணத்தை பிரிச்சுப் போடுங்க" என மூன்று நாலு வங்கிக் கணக்குகளை தர,

அத்தனையையும் நோட் பண்ணிக்கொண்டு போனை வைத்த மறுநொடி, பெண்ணின்

குடும்பம் பணத்தைப் போட பேங்க்கை நோக்கி ஓடத் துவங்கினர்.

அப்போது எதேச்சையாக நண்பருக்கு நான் போன் பண்ண, விஷயம் தெரிந்து அதிர்ந்து விட்டேன்.

நண்பரிடத்தில் மிக தெளிவாகவே சொன்னேன், இது ஒரு ஏமாற்று வேலை, நீங்கள் பணத்தை இழக்க போகிறீர்கள்,

பொறுமையாக நான் சொல்வதை கேளுங்கள் என இந்த மோசடி பற்றிய இணைய செய்திகளை அவருக்கு அனுப்பினேன்,

படித்து நண்பரின் குடும்பம் சற்று கலவரமானாலும், "தம்பி மாப்ள ரொம்ப நல்லவர், இங்க வந்தவுடன் பணத்தைக்கூட திருப்பி தரேன்னு சொன்னார், நீங்க சொல்ற விஷயங்கள் உலகத்தில நடந்திருக்கலாம், ஆனா இவர் பாவம் அதனால நீங்க கொஞ்சம் அமைதியா இருங்க" என என்மீது கோபப்பட்டனர்,

சற்று மன வருத்தம் இருந்தாலும் ஒரு குடும்பத்தின் கடின உழைப்பு, சேமிப்பு வீண் போய்விடக்கூடாது என மனதில் பட்டதால்

தொடர்ந்து அவர்களிடத்தில் பேசி இந்த மோசடியை விளக்கினேன்.

"தம்பி, அப்ப அந்த கஸ்டம்ஸ் ஆஃபீசர் பொய், இந்த மாப்பிள்ளை பொய், ஏர்போர்ட் பொய், எல்லாமே பொய்னு சொல்றீங்களா என்ற கேள்விக்கு "நிச்சயமாக,.. வேண்டும் என்றால் உங்க மாப்பிள்ளைக்கிட்ட சொல்லி லண்டன்ல இருந்து அவர் இப்ப வந்திருக்கிற விமான டிக்கட்டை வாட்ஸ்அப்ல அனுப்ப சொல்லுங்க,

ஏன்னு கேட்டா ஒரு சில காரணத்துக்காக பேசஞ்சர் லிஸ்ட் செக் பண்றோம்னு சொல்லுங்க" என்றேன்,

இவர்களும் கேட்டிருக்கிறார்கள். முதலில் என்ன நம்ப மாட்டேங்கிறீங்களா என பொய்க்கோபம் காட்டிய மாப்பிள்ளையும், சார் டைம் இல்ல என அவசரம் காட்டிய ஆபிசரும் தொடர் கேள்விகளுக்குப் பிறகு நிரந்தரமாக ஸ்விட்ச் ஆப் ஆகிவிட்டனர்.

இந்த மோசடி கும்பலில் பெண்களும் இருக்கிறார்கள்,

அர்த்த ராத்திரி ஆன்லைன் சாட்டிங் கனவான்கள் தான் இவர்கள் குறி.

அதே டெய்லர், அதே வாடகை போல, இவர்களிடத்தில் அதே காதல், அதே ஏர்போர்ட், அதே கஸ்டம்ஸ் தான்,

வழிசலுக்கு ஏற்றவாரு ஒரு அமௌண்ட்டை மொத்தமாக வழித்துவிட்டு கொண்டு சுவிட்ச் ஆப் ஆகிவிடுவார்கள்.

நல்ல காதலையே வெட்டிக் கொன்றுவிடும் நம்ம ஊரில்,

இந்த கனவான்கள் தற்காலிக மேட்ரிமோனியல் காதலில் தான் ஏமாந்த கதையை யாரிடத்தில் சொல்வார்கள் பாவம்,

ஆகவே நீங்கள் யாராயிருப்பினும் இவ்வகை மோசடிகளை தெரிந்து கொள்ளுங்கள்,

தெளிவாக இவற்றில் இருந்து உங்களையும் உங்கள் சேமிப்பையும் காத்துக் கொள்ளுங்கள்.

நண்பர்கள் யாரேனும் இதில் அகப்பட்டுக் கொண்டிருப்பின் அவர்களுக்கும் இந்த மோசடியை தெரியப்படுத்துங்கள்.

மயிரிழையில் பணம் தப்பிய மகிழ்ச்சி அந்த பெற்றோருக்கும் பெண்ணுக்கும் இருந்தாலும், தான் ஏமாற்றுப் பட்டுவிட்டோம் என்ற மனவலி இப்போதும் அவர்களுக்கு இருந்து கொண்டே தான் இருக்கிறது..!

மனுஷ்நந்தன்

நூல்கள் வெளியீட்டுவிழா

சிந்துவெளி அமைப்பு நடத்திய மூன்று நூல்கள் வெளியீட்டு விழா 19. 08. 2017 அன்று புதுவைத் தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்றது. விழாவில் ஆசிரியர் மு.கீதா அவர்களின் மனம் சுடும் தோட்டாக்கள், மீரா செல்வக்குமார் அவர்களின் ஒரு பட்டமிளகாயும் கொஞ்சம் உப்பும், ஆயுதா அவர்களின் அழுக்கு தேவதை ஆகிய நூல்கள் வெளியிடப்பட்டன.

நிகழ்வுக்கு முத்து நிலவன் அவர்கள் தலைமையேற்றார்.

கவிஞர் பெண்ணியம் செல்வக்குமாரி அவர்கள் ஒரு பட்டமிளகாயும் கொஞ்சம் உப்பும் நூல் குறித்து அறிமுகவுரையாற்றினார்.

விழா நிறைவுப் பேருரை பேராசிரியர் நா. இளங்கோ அவர்கள்

விழாவில் இன்றைய கவிதைப் போக்குகள் குறித்தும் சம கால கவிஞர்களின் பார்வை குறித்தும் விரிவாகப் பேச பட்டன.

விழாவுக்கான ஏற்பாடுகளை கவிஞர் பெண்ணியம் செல்வக்குமாரி அவர்களும் பண்டிதர் சாது .அரிமாவளவன் அவர்களும் மிகச்சிறப்பாக செய்திருந்தார்கள்.

புதுவைக்கும் புதுகைக்கும் இலக்கியப் பாலம் இந்த நிகழ்வால் நிகழ்ந்தேறியது.

கனவுக்குள் ஈ

நீயும் நானும் ரகசிய முற்றங்களின்
சொற்கூடம்
அல்லது கோபுரவாசல்
அல்லது கண்ணாடிச் சமவெளி
நெடுப்பமாய் ஓர் ஊஞ்சலும்
கயிற்றுக் கட்டிலும் ஆதார சுருதிகள்
பறவைகளின் மொழியும் ஊதற்காற்றும்
மீட்டிக்கொள்ள நினைக்கும் கனவுகள்

கொஞ்சம் பனியும்
கொஞ்சம் நிலவுமாய்
உரையாடத் தொடங்குகிறாய்
அரிஸ்டோட்டலின் கடைசிப் புள்ளியிலிருந்து
இது ஆரம்பமாகும்
கெதாஸிஸை ஒரு வாய்ப்பாடாகப்
பாடத் தொடங்குகிறாய்
நான் சேக்ஸ்பியரைச் சொல்வேன்
நீ லைலாவைச் சொல்வாய்
ஓத்தெல்லோவின் காதலி என்பாய்
நான் ஈடிபஸின் குருட்டுக் கண்கள்
அல்லது மரணம் என்பேன்
ஸெனாகிஸும் மக்ரிப் பூக்களும்
நீ விரும்பும் சொற்கள் என்பாய்

நீ நதிகளால் உரையாடுவாய்
நான் மழைகளின் தூறல்
நீ மரங்களின் ஒளியாவாய்
நான் பறவைகளின் தொனியாவேன்
பச்சை, நீலம், சிவப்பு என
குரல்கள் நிறம் மாறும்
சொற்களின் நிறப் புகையில்
அனைத்தும் நிறமாறிப் போகும்

ஊஞ்சலின் பொன்னிறக் கயிற்றிலிருந்து
சொற்களை நிலவின்
முகங்களில் குவிப்போம்
திசைகள்தோறும் நட்சத்திரங்களை
வீசி எறிவோம்
வானத்தின் கொஞ்ச நீலத்தையும்
கொஞ்சம் கறுப்பையும்
சுவாசித்துக்கொள்வோம்
பறவைகளின் இறகுகளின் மூச்செறிவோம்
புதிய வண்டுகளாகி
பூக்களின் புன்சிரிப்போடு சுற்றிவருவோம்
லாந்தர் விளக்கின் ஒளிச்சுடர்களை உண்போம்
சாம்பலாய் நிழலின்கீழ் விழுந்துகிடப்போம்
எழுவோம், விழுவோம், மீண்டும் எழுவோம்
ஒளிநிறச் சாறுகளைக் கிண்ணங்களில்
பருகிக்கொள்வோம். மயக்கம் தீருமட்டும்
மேகங்களை, நிலவை, விண்மீன்களைத்
தழுவிக்கொண்டு புரளுவோம்
விடிந்ததும்,
தேநீர்க் கோப்பைக்குள்ளான ஈ யை
தூக்கி எறிந்துவிட்டு
மட மட ... வென்று குடிக்கத்
தொடங்குகிறாய். ■

மும்தாஸ் ஹபீள்

மழையே... மழையே...

நாலுபுறம் கட்டிய
நாலடிச் சுவரும்
நங்கூரமாய் வேய்ந்த
நாலைந்து ஓலைகளும் தான்!

இந்த ஏழை வீட்டோட
இருப்பிடம் இப்போது!
பழைய சோறும் தண்ணியும்
பரிகாரமாப் போச்சு!

சிறு தூரல் விழுந்தது
மண்பாணையும் தட்டும்
மறுப்பின்றி நிறைந்தது
மறுநாள் பசிக்கு!

மெல்ல மெல்ல வலுத்து
மேலேறி வருகிறது வெள்ளம்
சொல்ல முடியாத சோகம்
வீடெங்கும் பள்ளம்!

அடுத்தநாள் அறிவிப்பில் வரலாம்
ஆதரவற்ற ஏழைக்கு உதவிப்பணம்
அரசாங்கம் தரும் போது
அதை வாங்க ஆளில்லையே!!

கவி முத்து

தலைதாழ்த்தி வணங்குகிறோம்!

சென்று வருகிறேன்...
அன்பாயிருங்கள்!

நீ சொன்ன கடைசி வார்த்தை
இதுதான் நண்பா.

வரமாட்டாய்...
எங்கள் மனதில் நிறைந்திருக்கிறாய்!

வரம்போடு தம்வாழ்வை
வகுத்தளித்து வாழ்ந்துவந்த
பெரம்பலூரில் பிறந்திட்ட
பெருவைரம் இராமதாசு,
உரமாக இருந்துவந்து
உயர்வான சிற்றிதழைத்
தரமான எழுத்துகளால்
தவழவிட்டு மகிழ்ந்துவந்தார்.

பெற்றெடுத்த பிள்ளையினும்
பிரியமுடன் வளர்த்துவந்த
சிற்றிதழைத் தம்பொறுப்பில்
சிரமங்கள் பலவிடையே,
முற்றும்நம் தமிழ்வளர
முனைப்பாக பாடுபட்டு
உற்றதுணை யாயிருந்து
உயிரையும் உவந்தளித்தார்.

துபாயிலவர் இருந்தாலும்
துணிவோடு பலசெயல்கள்
சபாக்கள்தரும் வலுவோடு
சாதித்துக் காட்டியதால்
அபாயங்கள் வந்தபோதும்
அவைவீழ்த்தி வெற்றிகண்டு
சிபாரிசுகள் செய்வதெல்லாம்
சிறுபிள்ளைத் தனமென்பார்.

அமிழ்தான மொழியாகி
அகிலத்தில் சிறப்புற்ற
கமழ்கின்ற இனியமொழி
கருணைமிகு தமிழ்மொழியைச்
சிமிழாக்கி சிற்றிதழில்
சேர்த்தக்ருஷ் ராமதாசைத்
தமிழ்நெஞ்சம் இதழின்று
தலைதாழ்த்தி வணங்குகிறது!